**கவனிக்க.-** *20.09.2013 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1830 - 2013 සැප්තැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2013.09.27

*1830 ஆம் இலக்கம் - 2013 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1268 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1270 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** *அதாவது 2013, ஒற்றோபர் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, ஒற்றோபர் மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச்சேவை ஆணைக்குழு

*காதிகள் சபையில் நிலவும் தலைவர் மற்றும் அங்கத்தவர் வெற்றிடங்களுக்கு ஆட்களைச் சேர்த்துக்கொள்வதற்காக முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) இன்கீழ் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

*கீழே குறிப்பிடப்படும் தகைமைகளைக் கொண்டவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம் :*

*விண்ணப்பதாரர் முஸ்லிம் சமயத்தைச் சார்ந்த ஆணாக இருப்பதோடு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் பட்டம் பெற்றுள்ள பட்டதாரி ஒருவராக அல்லது முஸ்லிம் சமய மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் வழங்கப்படும் சான்றிதழ் பெற்றுள்ள மௌலவி ஒருவராக அல்லது கல்வித் திணைக்களத்தினால் வழங்கப்படும் அல்-ஆலிம் சான்றிதழ் பெற்றுள்ள ஒருவராக அல்லது சட்டத்தரணி ஒருவராக அல்லது அதற்குச் சமனான தொழில்சார் தகைமையுடைய ஒருவராக அல்லது ஓய்வுபெற்ற பதவிநிலை தரத்திலான உத்தியோகத்தர் ஒருவராக இருத்தல் வேண்டும்.*

*தற்போது அரச சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள் (நீதிச்சேவை உத்தியோகத்தர்கள் தவிர) இதற்கு விண்ணப்பிக்கத் தகைமையற்றவர்களாவர்.*

*விண்ணப்பதாரர் இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றி ஒழுகுபவராகவும், 40 வயதிற்கு மேற்பட்டவராகவும், நல்ல தேகாரோக்கியம் உள்ளவராகவும், நல்லொழுக்கமுள்ளவராகவும் இருக்கவேண்டியதோடு முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டம் மற்றும் விசேடமாக முஸ்லிம் சட்டம் பற்றிய நல்ல அறிவுடையவராகவும் சமூகத்தில் நல்ல வரவேற்பும் மதிப்பும் உள்ளவராகவும் விவாகமானவராகவும் இருத்தல் வேண்டும்.*

*காதிச் சபையின் தலைவருக்கு மாதாந்தம் ரூபா 12,000 நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 2,500 வீதம் மாதமொன்றிற்கு ரூபா 10,000 இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் அங்கத்தவர் ஒருவருக்கு மாதாந்தம் ரூபா 10,000 நிரந்தரக் கொடுப்பனவாகவும் ஒவ்வொரு அமர்விற்கும் ரூபா 2,000 வீதம் மாதமொன்றிற்கு ரூபா 8,000 இற்கு மேற்படாத தொகை பிரயாணச் செலவாகவும் வழங்கப்படும்.*

*கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைய, விண்ணப்பப்படிவங்கள் 2013 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடையுமாறு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "காதிச்சபை" எனக் குறிப்பிடல் வேண்டும். ஆவணங் களின் மூலப்பிரதிகள் விண்ணப்பத்துடன் அனுப்பப்படலாகாது.*

*சிசிர ரத்னாயக்க,*
*செயலாளர் (வேலை பார்க்கும்),*
*நீதிச்சேவை ஆணைக்குழு.*

*நீதிச்சேவை ஆணைக்குழுச் செயலகம்,*
*த. பெ. இல. 573,*
*கொழும்பு 12,*
*2013, செத்தெம்பர் 12.*

## நீதிச்சேவை ஆணைக்குழு

*1965 ஆம் ஆண்டின் 1 ஆம் மற்றும் 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கங்களினால் திருத்தப்பட்ட முஸ்லிம் விவாக, விவாகரத்துச் சட்டத்தின் (அத்தியாயம் 115) கீழ் காதிகள் சபைக்கு தலைவர் மற்றும் அங்கத்தவர்களை நியமனம் செய்வதற்கான மாதிரி விண்ணப்பப்படிவம்*

1. *முழுப்பெயர் :*

2. *முதலெழுத்துக் களுடன் பெயர் :*

3. *நிரந்தர முகவரி :*

4. *அஞ்சல் முகவரி :*

5. *பிறந்த திகதி :*

6. *வயது :*

7. *இனம் :*

8. *சமயம் :*

9. *தே. அ. அ. இல. :*

10. *தொலைபேசி இலக்கம் :*

11. *கல்வித் தகைமைகள் :*

| | | |
|---|---|---|
| | | |

12. தொழில் தகைமைகள் :

| | | |
|---|---|---|
| | | |

13. விண்ணப்பதாரி எழுத, வாசிக்கத் தெரிந்த மொழிகள் :

| | |
|---|---|
| | |
| | |

14. விண்ணப்பதாரிக்கு முஸ்லிம் சட்டம் பற்றிய அறிவுண்டா ? :

15. விவாகமானவரா ? :

16. நீர் ஒரு சட்டத்தரணியா ? அவ்வாறாயின் இணைத்துக்கொள்ளப்பட்ட திகதி :

17. முன்னைய, தற்போதைய தொழில்கள் (திகதி விபரங்களுடன்) ? :

| முதல் | வரை | தொழில் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |
| | | |

18. விண்ணப்பதாரிக்குரிய சொத்துக்களின் பெறுமதி : ரூ.

19. மாதாந்த வருமானம் : ரூ.

20. கடன்கள் இருப்பின் தொகை விபரம் : ரூ.

21. சென்ற பத்து வருட காலப்பகுதியினுள் நீர் முனைப்பாக அரசியலில் ஈடுபட்டிருந்தீரா ? :

22. நீர் வருமான வரி செலுத்துமொருவரா ? :

23. உமக்கெதிராக நீதிமன்றமொன்றினால் குற்றவியல் வழக்கேதேனும் உண்டா ? இருந்ததா ? :

24. நீதிமன்றங்களில் தண்டனை பெற்றிருப்பின் அதுபற்றிய விபரங்கள் ? :

உம்மைப் பற்றி நன்கறிந்துள்ள உம்மைப் பற்றிய தனிப்பட்ட விபரங்கள் பெறக்கூடியவர்கள் :

| (1) | (2) |
|---|---|
| பெயர் : | பெயர் : |
| முகவரி : | முகவரி : |
| தொழில் : | தொழில் : |
| உம்மையறிந்துள்ள காலப் பகுதி : | உம்மையறிந்துள்ள காலப் பகுதி : |

இவ்விண்ணப்பத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானதெனவும் சரியானதெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

.............................................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி ..............................,

**குறிப்பு**.- அனைத்து சான்றிதழ்களினதும் பிரதிகளை இத்தோடு இணைக்கவும்.

*9-1216*

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

திருத்தம்

**கல்வி அமைச்சு**

*ஆசிரிய கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்தல் - 2013/2014*

(அ) வர்த்தமானி அறிவித்தல் 07 (iv) :

அரசாங்கப் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் 2013.07.05 ஆந் திகதியில் குறைந்தபட்சம் மூன்று வருடகால ஆசிரிய சேவையைப் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், இப்பயிற்சி நெறிக்கு ஆசிரியர்களை விடுவிக்கும் பூரண அதிகாரம் மாகாண கல்விச் செயலாளருக்குரியதாகும்.

(ஆ) வர்த்தமானி அறிவித்தல் 09(II)(இ) :

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் 2013.10.15.

அநுர திசாநாயக்க,
கல்விச் செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
13.09.2013.

9-1196

---

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

நில அளவைத் திணைக்களம்

**நில அளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவைசார் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை**

நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் இலங்கை தொழில்நுட்ப சேவைசார் கீழ்க்காணும் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்குத் தகைமையுடைய இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1.1 ஆட்சேர்ப்புக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பதவிகள் :

அட்டவணை இல. 01 - ஆட்சேர்ப்புக்காக உத்தேசிக்கப்பட்டுள்ள பதவிகள்

| தொடர் இல. | பதவிப் பெயர் | | நிரப்பப்படவுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கை | ஆட்சேர்ப்புத் தரம் |
|---|---|---|---|---|
| 1 | வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | கொழும்பு தலைமை அலுவலகத்தில் மாத்திரமே வெற்றிடம் நிலவும் பகுதிகளாகும். சேவைக் காலம் முழுவதும் தலைமை அலுவலகத்திலேயே சேவையாற்ற வேண்டும். | 212 | பயிற்றுவிப்புத் தரம் |
| 2 | தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர்கள் | | 06 | பயிற்றுவிப்புத் தரம் |
| 3 | வான் ஒளிப்பட ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் | | 01 | பயிற்றுவிப்புத் தரம் |
| 4 | கல்லச்சுக்கலை அச்சிடுவோர் | | 05 | பயிற்றுவிப்புத் தரம் |
| 5 | கட்டிட மேற்பார்வையாளர் | | 01 | III ஆம் தரம் |
| 6 | போக்குவரத்து உத்தியோகத்தர் | | 01 | III ஆம் தரம் |

1.2 பதவிக்குரிய கடமைகளின் தன்மை :

**அட்டவணை இல. 02 - பதவிக்குரிய கடமைகளின் தன்மை**

| தொடர் இல. | பதவிப் பெயர் | கடமைகளின் தன்மை/பிரதான அலுவல்கள் |
|---|---|---|
| 1 | வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | படங்கள் தயாரித்தல் மற்றும் அதனுடன் தொடர்புடைய தொழில்நுட்ப வேலை, நிலஅளவை தொடர்பான ஆரம்ப மற்றும் இறுதி வேலை, அது தொடர்பான பதிவேடுகளைப் பராமரித்தல். |
| 2 | தொலையுணர்வு தொழில் நுட்பவியலாளர்கள் | வான்முறை ஒளிப்படங்களை மற்றும் செய்மதி விம்பங்கள் மூலம் பெறும் பொருள் விளக்கங்களை ஆராய்ந்து அவற்றால் தேசப்படங்களைத் தயாரித்தல், அவற்றை கனணிமயப்படுத்தல், தேவைப்படும் தரவுகளை வழங்குதல். |
| 3 | வான் ஒளிப்பட ஆய்வுகூட தொழில்நுட்பவியலா ளர்கள் | விமானத்தில் பயணித்து முப்பரிமாணப் படங்கள் எடுத்தலும் அவற்றை வெளிப் படுத்தி படங்களின் துணையுடன் ஒளிப்படங்கள் தயாரிக்க உதவுதலும், விசால மாக்கப்பட்ட படப்பிரதியாக்கம், படச்சீராக்கல் வான்முறை ஒளிப்படத் தொடுகை அச்சிடுகை போன்றன. |
| 4 | கல்லச்சுக்களை அச்சிடுவோர் | தேசப்படங்களை அச்சிடுதல். |
| 5 | கட்டிட மேற்பார்வை யாளர் | * வருடாந்த கட்டிடப் பராமரிப்புத் திட்டத்தைத் தயாரித்தல்<br>* கட்டிடப் பராமரிப்புச் செயல் முறையை முகாமைத்துவத்திற்கு முன்மொழிதல்<br>* ஊழியர் குழுக்களைக் கண்காணித்தல்<br>* பராமரிப்புகளுக்கு தேவையான மூலப் பொருட்களையும் உபகரணங் களைக் களஞ்சியப்படுத்தலும், முகாமையும்<br>* கொடுப்பனவுகளுக்காக அளவீடு செய்தலும், பரிந்துரைகளைப் பெறுத லும் |
| 6 | போக்குவரத்து உத்தி யோகத்தர் | திணைக்களத்துக்குச் சொந்தமான வாகனங்களை ஓட்டுவதற்கு தகுந்த நிலைமை யில் பேணிச் செல்வதற்குத் தேவையான தொழில்நுட்பத் தகவல்களை வழங்குதல், பழுதுபார்ப்புகளுக்குத் தேவையான பரிந்துரைகளையும் தொழில்நுட்ப அறிக்கைகளையும் பெற்றுத்தருதல், பழுதுபார்ப்புகளின் பின் வாகனங்களது ஓட்ட நிலைமையைப் பரிசீலித்தல், வாகனப் பராமரிப்புப் பற்றி பரிசீலித்தல், சாரதிகளுக்கு ஆலோசனை வழங்குதல், வாகன விபத்துக்களின்போது உடனேயே பரிசோதித்து அறிக்கை சமர்ப்பித்தல், பாவனைக்குதவாத பழுதடைந்த வாகனங்களைக் கழித்துவிடுதல் போன்ற நடவடிக்கைகள், சுற்றாடல் தூய்மைசார் சான்றிதழைப் பெற்றுக்கொள்ள வாகனங்களைத் தயாராக்குதல். |

2. நியமிக்கப்படுவோர் தொகையும், நியமனத் திகதியும் நியமிப்பு அதிகாரியினால் தீர்மானிக்கப்படும். வெற்றிடங்கள் அனைத்தையுமோ அல்லது அதில் ஏதேனுமொரு தொகையை நிரப்பாமலிருக்கவோ நியமிப்பு அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

**அட்டவணை இல. 03**

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்ப மாதச் சம்பளம் |
|---|---|---|
| பயிற்றுவிப்புத் தரம் (கட்டிட மேற்வை யாளர்கள், போக்கு வரத்து உத்தியோ கத்தர்கள் பதவி களுக்கு ஏற்புடைய தாகாது.) | இல்லை | 1 ஆம் வருடம் - மாதாந்தம் ரூபா 12,920. 2 ஆவது வருடம் - மாதாந்தம் ரூபா 13,040. அ. நி. சுற்ற றிக்கை இல. 06/2006 (II) இன் 14 ஆம் பந்தியின் 9 ஆவது ஏற்பாடுகளுக்கு அமைவாக. |
| III ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 (எம்என் 3-2006ஏ) | ரூபா 15,005 |

| தரம் | சம்பளப் படிமுறை | ஆரம்பமாதச் சம்பளம் |
|---|---|---|
| II ஆம் தரம் | மாதாந்தம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 (எம்என் 3-2006ஏ) (12 ஆவது சம்பள அளவுத் திட்டம் ஆரம்பம்) | ரூபா 17,485 |
| I ஆம் தரம் | (எம்என் 3-2006ஏ)மாதாந்தம் ரூபா 15,005 - 4 X 180 - 6 X 240 - 11 X 320 - 20 X 360 - ரூபா 27,885 (எம்என் 3-2006ஏ) (23 ஆவது சம்பள அளவுத் திட்டம் ஆரம்பம்) | ரூபா 21,045 |
| விசேட தரம் (கட்டிட மேற்பார்வையாளர், போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஏற்புடையதாகாது) | மாதாந்தம் ரூபா 20,030 - 11 X 365 - 18 X 500 - ரூபா 33,045 (எம்என் 7-2006ஏ) | ரூபா 20,030 |

**4. நியமன நியதிகள்.-** இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். நியமனம் மூன்றாண்டுகால தகுதிகாண் நிலைக்கு உள்ளாக்கப்படும். வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிக்கு தெரிவுசெய்யப்படும் பரீட்சார்த்திகள் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்குத் தயாராக இருக்க வேண்டும். ஏனைய பதவிகள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் நிலவும் பதவிகள் என்பதால் சேவைக்காலம் முழுவதும் தலைமை அலுவலகத்திலேயே சேவையாற்ற வேண்டும். நியமனங்கள், இந்த வர்த்தமானிப் பத்திரிகையின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவையின் பதவி நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்கொள்ளப்படும்.

**5. தகைமைகள் :**

5.1 *அடிப்படைத் தகைமைகள் :*

(அ) ஓர் இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும் ;

(ஆ) விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்குக் குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் நிரந்தரப் பதவி வகிப்பவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதல்ல.)

5.2 *கல்வித் தகைமைகள் :*

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் மற்றும் ஏதேனும் ஒரு பாடம் உள்ளடங்கலாக நான்கு (04 ) பாடங்களில் திறமைச் சித்திகளுடன் மொத்தம் ஆறு (06) பாடங்களில் இரண்டு தடவைக்கு மேற்படாதவாறு சித்தியடைந்திருக்க வேண்டும்.

அத்துடன்

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் இணைந்த கணிதம், பௌதீகவியல் மற்றும் இரசாயனவியல் ஆகிய பாடங்களில் இரண்டு பாடங்களுட்பட விஞ்ஞானப் பாடங்கள் மூன்றில் (சாதாரண பொதுப் பரீட்சை நீங்கலாக) ஒரே தடவையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

கட்டிட மேற்பார்வையாளர் மற்றும் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் மேற்காணும் 5.1 மற்றும் 5.2 தகைமைகளுக்கு மேலதிகமாகக் கீழ்க்காணும் தொழில்சார் தகைமைகளில் ஒன்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.

(1) கட்டிட மேற்பார்வையாளர் :

(I) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் (சிவில்) மூன்றாண்டு பகுதிநேரப் பயிற்சிப் பாடநெறி பயின்றிருத்தல்.

(II) தொழில்துறை சார்ந்ததாய் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 ஆம் மட்டத் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்.

(2) போக்குவரத்து உத்தியோகத்தர் :

(I) அரசினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப கல்லூரி ஒன்றில் தேசிய தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ் (இயந்திரவியல்) மூன்றாண்டு பகுதிநேரப் பயிற்சிப் பாடநெறி பயின்றிருத்தல்.

(II) தொழில்துறை சார்ந்ததாய் தேசிய தொழில் தகைமை (NVQ) 5 அல்லது 6 ஆம் மட்டத் தகைமைகளைப் பூரணப்படுத்தியிருத்தல்.

மேலே (1) மற்றும் (2) இல் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்சார் தகைமைகளைப் போக்குவரத்து உத்தியோகத்தர் பதவிக்காக இயந்திரவியல் துறையிலும், கட்டிட மேற்பார்வையாளர் பதவிக்காக சிவில் துறையிலும் கீழ்க்காணும் நிறுவனம் ஒன்றிலிருந்து பெற்றிருத்தல் வேண்டும் :-

(அ) மொரட்டுவை பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹார்டி நிறுவனத்தால் வழங்கப்படும் தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி

அல்லது

(ஆ) தேசிய பயிலுனர் மற்றும் தொழில் பயிற்சி அதிகார சபையினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாடநெறி

அல்லது

(இ) கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் வழங்கப்படும் தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா பாடநெறி

அல்லது

(ஈ) இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தால் வழங்கப்படும் தொழில்நுட்ப டிப்ளோமா பாடநெறி

அல்லது

(உ) இலங்கைப் பொறியியல் நிறுவனத்தால் நடத்தப்படும் பரீட்சையின் I ஆம் பாகத்தை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியிருத்தல்

அல்லது

(ஊ) உயர் கல்வி அமைச்சு மற்றும் மேற்குறிப்பிட்ட தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்கள் ஆகியவற்றை விசாரித்துக் கருத்தறிந்தபின் மேற்காணும் தொழில்நுட்பத் தகைமையுடனும் சகலவிதத்திலும் சமமானதென பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரால் அங்கீகரிக்கப்படும் வேறு தொழில்நுட்பத் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

5.3 உடல்சார் தகைமைகள்.- ஒவ்வொரு விண்ணப்பதாரரும் இலங்கையின் எந்தவொரு பகுதியிலும் சேவையாற்றவும், பதவிக்குரிய கடமைகளை நிறைவேற்றவும், போதிய உடல் ரீதியானதும், மனோரீதியானதுமான தகைமைகளைக் கொண்டிருக்க வேண்டும்.

**குறிப்பு**.- சகல விண்ணப்பதாரர்களும் பதவிக்குரிய தகைமைகள் அனைத்தையும் விண்ணப்ப முடிவுத் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ பூரணப்படுத்தியிருத்தல் கட்டாயமானதாகும்.

6. **பொய்யான தகவல் வழங்குதல்**.- இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு யாதேனுமொரு விண்ணப்பதாரர்களுக்கும் தகைமை இல்லையென்பது வெளிப்பட்டால் பரீட்சைக்கு முன்னரோ அல்லது பரீட்சை நடைபெறும் பொழுதோ அல்லது பரீட்சைக்குப் பின்னரோ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவரது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படலாம். சேவையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட பின்னரெனினும் விண்ணப்பதாரர் ஒருவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஏதேனுமொரு தகவலை அவர் அது பிழையெனத் தெரிந்துகொண்டே சமர்ப்பித்திருந்தாலோ அல்லது ஏதேனுமொரு முக்கிய தகவலை வேண்டுமென்றே மறைத்திருப்பது தென்பட்டாலோ அவரை அரச சேவையிலிருந்து நீக்க இடமுண்டு.

7. **பரீட்சை முறை**.- இப்பரீட்சை இரண்டு பாடங்கள் கொண்டதோர் எழுத்துப் பரீட்சையாகும். இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடத்தப்படுவதுடன் விண்ணப்பித்த மொழி மூலத்தைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படாது.

| பாடம் | பெறக்கூடிய முழுப் புள்ளிகளின் அளவு | சித்தியெய்தப் பெறவேண்டிய ஆகக் குறைந்த புள்ளியின் வீதம் | காலம் |
|---|---|---|---|
| (I) நுண்ணறிவு | 100 | 50% | 1 மணித்தியாலம் |
| (II) தொழில்நுட்ப வினாத்தாள் | 100 | 50% | 2 மணித்தியாலம் |

7.1 ***பாடவிதானம்***

(I) *நுண்ணறிவு*.- பரீட்சையின் பகுத்தறிவுபூர்வமாகச் சிந்திக்கும் ஆற்றல், ஆய்வுத்திறன் மற்றும் தீர்மானம் எடுக்கும் ஆற்றல் என்பவற்றைப் பரீட்சிக்கும் நோக்குடனான வினாக்களுடன் உருவாக்கப்பட்டதாய் அமையும்.

(II) *தொழில்நுட்ப வினாத்தாள்.- கணிதம்.- அட்சரகணிதம் (சமனிலிகள், மாறிகள், தொடர்கள், மடக்கைகள்)*
*திரிகோணமானம் (சமவலுச் சமன்பாடுகள், முக்கோணங்களைத் தெளிவாக்குதல்)*
*புள்ளிவிபரவியல் (இடை, ஆகாரம், நியமவிலகல், நிகழ்தகவு)*

*பௌதிகவியல்.- ஒளியும் ஒளியியலும் (தெறிவும் முறிவும், சமதள ஆடிகள், வளைந்த பரப்புக்கள், அரியம், கண்ணாடி வில்லைகள், ஒளியியல் சூத்திரம், நுணுக்கக்காட்டிகள், தொலைகாட்டிகள்) நியுற்றனின் நிலையியக்கவியல் (எண்ணளவுகளும் காவிகளும், நியுற்றனின் இயக்கவிதிகள், இயங்குவிசை)*

*நானாவித விடயங்கள்.- புவிச்சரிதவியலின் அறிமுகம் (பூமியின் வடிவம், பிரதேசவியல் போன்றன), திண்மப் பதார்த்தங்களின் கோணப்பார்வை, எறியங்களின் பெறுமதி, நிலஅளவைத் திணைக்களத்தால் தயாரிக்கப்படும் தேசப்படங்கள்.*

***8. தெரிவு முறை :***

*8.1 நிலஅளவையாளர் நாயகத்தால் நடாத்தப்படும் எழுத்துப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கமைய அதிகூடிய புள்ளிகளைப் பெறும் விண்ணப்பதாரர்களிடையே நிரப்புவதற்கு உத்தேசிக்கப்படும் வெற்றிட எண்ணிக்கைக்குச் சமனான விண்ணப்பதாரர்களது தொகை பெறுபேறுகளின் அடிப்படையில் திறமை ஒழுங்கில் வரிசைப்படுத்தப்பட்டு இரண்டாவதாக பதவிகளுக்கான விருப்பத் தெரிவு வரிசைக்கிரமம் கவனத்தில் கொள்ளப்பட்டு இவ்விரண்டுக்கும் அமைவாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.*

*8.2 தகைமைகளை உறுதிப்படுத்திக்கொள்ள நேர்முகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படுவதுடன், நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.*

*9. **ஆட்சேர்ப்பு**.- பயிற்றுவிக்கும் தரத்திற்குத் தேர்ந்தெடுக்கப்படுவோர் தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனம் மூலம் நடத்தப்படும் இரண்டு வருட தொழில்நுட்பவியலாளர் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாய் பூரணப்படுத்திய பின் தொழில்நுட்ப சேவையில் III ஆம் தரத்திற்கு நியமிக்கப்படுவர்.*

*10. **விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்தலும் சமர்ப்பித்தலும்**.- (அ) இவ்வறிவித்தலின் முடிவில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப 21 x 29 செ. மீ. (ஏ4) அளவுத்தாளில் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பதாரர்கள் தாமாகவே விண்ணப்பப்படிவங்களைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இல. 1 முதல் 4 வரையான தலைப்புக்கள் 1 ஆம் பக்கத்திலும், இல. 4.1 முதல் 10.1 வரையான தலைப்புக்கள் 2 ஆம் பக்கத்திலும், இல. 10.2 முதல் 11.1 வரையான தலைப்புக்கள் 3 ஆம் பக்கத்திலும், இல. 12 முதல் 14 வரையான தலைப்புக்கள் நான்காம் பக்கத்திலும், இல. 15 ஆம் இலக்க தலைப்பு ஐந்தாம் பக்கத்திலும் உள்ளடங்கும் வகையில் விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படல் வேண்டும்.*

*(ஆ) தற்போது அரச மற்றும் மாகாண அரச சேவையின்கீழ் பணியாற்றும் விண்ணப்பதாரர்கள் தமது விண்ணப்பங்களைத் தமது திணைக்களத் தலைவர்கள் ஊடாகவும், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் உள்ளூராட்சி சபைகளின்கீழ் பணியாற்றும் உத்தியோகத்தர்கள் அவற்றைத் தமது நிறுவனங்களின் தலைவர்கள் ஊடாகவும் உரிய தினத்திற்கு முன்னர் சமர்ப்பித்தல் வேண்டும்.*

*(இ) விண்ணப்பப்படிவங்கள் தாம் பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே தயாரிக்கப்படல் வேண்டும்.*

*(ஈ) உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக இல்லாத, உரிய தினத்திற்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத மற்றும் சரியாகப் பூர்த்திசெய்யப்படாமல் குறைபாடுகளுடன் கூடிய விண்ணப்பப்படிவங்கள் யாவும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். உரிய முறையில் விண்ணப்பப்படிவங்களை நிரப்பாமையினால் நிகழும் விளைவுகளை விண்ணப்பதாரர்களே தாங்கிக்கொள்ள வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்பிரதியொன்றைத் தம்மிடம் வைத்திருப்பது பயனுள்ளதாக அமையும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பம் பரீட்சை அறிவித்தலுடன் காணப்படும் விண்ணப்பப்படிவத்துடன் ஒத்திருக்கின்றதா என விண்ணப்பதாரர் கவனித்தல் வேண்டும். இல்லையேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படலாம்.*

*(உ) விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதென அறிவிக்கப்பட மாட்டாது. தபாலில் காணாமல் போகும் விண்ணப்பப்படிவங்கள் தொடர்பில் செய்யப்படும் எதுவித முறைப்பாடுகளும் கவனத்தில் கொள்ளப்பட மாட்டாது.*

***முக்கிய குறிப்பு**.- பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பித்த பரீட்சை நிலையத்தினைப் பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.*

*10.1 வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகள் உடையவர்கள் மாத்திரமே விண்ணப்பித்திருப்பார்கள் எனும் முன் அனுமானத்தில் உரிய பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி உரிய தினத்தன்றோ அத்தினத்திற்கு முன்னரோ*

விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள சகல விண்ணப்பதாரர்களுக்கும் போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற நிலஅளவையாளர் நாயகத்தினால் இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்குத் தோற்ற அனுமதி அட்டை வழங்கப்படுவது விண்ணப்பதாரர் இப்பரீட்சைக்குத் தோற்றவோ அல்லது இப்பதவிக்கான தகைமை உள்ளவர் என ஏற்றுக்கொள்ளப்பட்டதாகவோ கருதப்படக் கூடாது. விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு வர்த்தமானி அறிவித்தலுக்கமைவாகத் தகைமைகள் கொண்டவரெனப் பரிசீலிக்கும் வேளையில் தேவையான தகைமைகள் இல்லையென வெளிப்படுமானால் அவரது பரீட்சார்த்தி உரிமை பறிக்கப்படும்.

10.2 விண்ணப்பப்படிவம் அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''தொழில்நுட்ப சேவைகள் பதவிக்கு ஆட்சேர்ப்பு'' எனத் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.

10.3 விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்கப் பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான் சத்தியப்பிரமாண ஆணையாளர், நொத்தாரிசு, முப்படைகளிலும் ஆணையிடும் தரத்தில் உள்ள அதிகாரிகள், பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் அறிவிக்கப்பட்டுள்ள ஒரு பதவியைக் கொண்டுள்ள உத்தியோகத்தர் அல்லது அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 06/2006 இன் தரப்படுத்தலுக்கமைய மூன்றாம் நிலை அல்லது சிரேஷ்ட மட்டங்களிலுள்ள ஒரு நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் ஆகியோரில் எவரேனும் ஒருவரால் உறுதிப்படுத்த வேண்டும்.

11. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூபா 800 ஆகும். இத்தொகையை கொழும்பு 5, கிருல வீதி, இல. 150 இல் அமைந்துள்ள நிலஅளவைத் திணைக்களத்தின் தலைமை அலுவலகத்தில் உள்ள காசாளர் பிரிவில் அல்லது எந்தவொரு மாவட்ட நிலஅளவை அலுவலகத்திலோ அல்லது தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்திலோ செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடத்தில் கழறாதவாறு ஒட்டுதல் வேண்டும். (பற்றுச்சீட்டின் நிழற்பிரதியொன்றினை எதிர்காலத் தேவைக்காக தன்வசம் வைத்திருத்தல் வேண்டும்). எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது என்பதுடன் காசுக்கட்டளை அல்லது காசோலை ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. பற்றுச்சீட்டு இன்றி சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

12. **விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்தல்**.- பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2013.10.31 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்வரும் முகவரிக்கு கிடைக்கக்கூடியதாய் பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும் :-

நிலஅளவையாளர் நாயகம்.
நிலஅளவைத் திணைக்களம்,
த. பெ. இல. : 506,
கொழும்பு.

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சைக்குத் தோற்றும் ஒரு பரீட்சார்த்தி அப்பரீட்சை நிலைய மேற்பார்வையாளரிடம் தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைச் சமர்ப்பிக்கத் தவறும் பரீட்சார்த்திக்கு பரீட்சைக்குத் தோற்ற அனுமதியளிக்கப்பட மாட்டாது. ஒரு பரீட்சார்த்தி தமக்கென குறித்தொதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.

14. **பரீட்சார்த்தியின் ஆளடையாளம்**.- பரீட்சை மண்டபத்தில் தாம் தோற்றும் ஒவ்வொரு வினாத்தாள் தொடர்பாகவும் பரீட்சை மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் பரீட்சார்த்திகள் தமது ஆளடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இதற்கென பின்வரும் ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் தேசிய அடையாள அட்டை ;
(ii) தபால் அதிபரினால் வழங்கப்பட்ட செல்லுபடியான அஞ்சல் அடையாள அட்டை ;
(iii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

15. இங்கு குறிப்பிடப்படாத ஏதேனுமொரு விடயமிருப்பின் அது குறித்து நிலஅளவையாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படும். சகல விண்ணப்பதாரர்களும் இவ்வர்த்தமானியில் காணப்படும் பொதுவான பரீட்சை விதிமுறைகளுக்கு அமைவாக நடந்துகொள்ளக் கட்டுப்பட்டுள்ளனர்.

கே. தவலிங்கம்,
நிலஅளவையாளர் நாயகம்.

நிலஅளவைத் திணைக்களம்,
கொழும்பு 05,
2013.09.03.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**காணி, காணி அபிவிருத்தி அமைச்சு**

*நிலஅளவைத் திணைக்களம்*

*நிலஅளவைத் திணைக்களத்தில் வெற்றிடம் நிலவும் தொழில்நுட்ப சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை*

☐
(அலுவலகப் பயன்பாட்டிற்கு மட்டும்)

1. பரீட்சைக்குத் தோற்ற விண்ணப்பிக்கும் பரீட்சை நிலையம் :

கொழும்பு ☐
தியத்தலாவை ☐
அநுராதபுரம் ☐

பரீட்சைக்குத் தோற்ற உத்தேசிக்கும் நிலையத்தின் பெயர் குறித்த கூட்டினுள் ✓ அடையாளத்தையும், ஏனைய இரு கூடுகளுக்குள்ளும் ✕ அடையாளத்தையும் இடவும்.

2. பரீட்சைக்குத் தோற்றுகின்ற மொழி மூலம் : ☐
(சிங்களம்-S, தமிழ்-T, ஆங்கிலம்-E)
(தரப்பட்டுள்ள கூட்டினுள் ஆங்கில அட்சரத்தை/குறியீட்டை இடவும்)

3. ஆட்சேர்ப்புக்கான பதவிகளிடையே நியமனம் பெறவிரும்பும் பதவிகளின் ஒழுங்குவரிசை மிகக்கூடிய விருப்பமுள்ள பதவிக்கு இலக்கம் 1 ஐயும் விருப்பம் குறையும் ஒழுங்குவரிசைக்கமைய ஏனைய பதவிகளுக்கு 2, 3 என வரிசைப்படுத்தி விருப்பு இலக்கங்களைக் குறிப்பிடவும்.

| தொடர் இல. | பதவிப்பெயர் | விருப்பு இல. |
|---|---|---|
| 1. | வரைபடத் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | |
| 2. | தொலையுணர்வு தொழில்நுட்பவியலாளர்கள் | |
| 3. | வான் ஒளிப்பட ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்கள் | |
| 4. | கல்லச்சுக்களை அச்சிடுவோர் | |
| 5. | கட்டிட மேற்பார்வையாளர் | |
| 6. | போக்குவரத்து உத்தியோகத்தர் | |

4. முதல் எழுத்துக்களுடன் பெயர் (திரு./திருமதி/செல்வி) :
தமிழில் :......................................................................
ஆங்கிலத்தில் :..............................................................

4.1 முதலெழுத்துக்களைக் குறிக்கும் பெயர்கள் (தெளிவான எழுத்துக்களில்) :
தமிழில் :......................................................................
ஆங்கிலத்தில் :..............................................................

5. தேசிய அடையாள அட்டை இல. :..............................................................

6. பிறந்த திகதி :

ஆண்டு :.................. மாதம் :.................. திகதி :..................

6.1 விண்ணப்ப முடிவுத் திகதியன்று வயது :

வருடங்கள் :.................. மாதங்கள் :.................. நாட்கள் :..................

7. பால் (ஆண்-M, பெண்-F) : ☐
(தரப்பட்டுள்ள கூட்டினுள் ஆங்கில அட்சரத்தை/குறியீட்டை இடவும்)

8. நிரந்தர முகவரி (தெளிவான எழுத்துக்களில்) :.........................

8.1 முகவரி கொடுக்கப்பட்ட நிர்வாக மாவட்டம் :..................
(அட்டவணை 1 ஐப் பார்க்கவும்)

மாவட்ட இலக்கம் : [ ] மாவட்டத்தின் பெயர் : [ ]

8.2 எப்போதிருந்து அம்மாவட்டத்தில் வசிக்கின்றீர்கள் ? :..................

9. தொலைபேசி இலக்கம் (நிரந்தர) :..................
கையடக்கத் தொலைபேசி :.............................

10. கல்வித் தகைமைகள் :

10.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

முதலாவது அமர்வு :

(i) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :............................
(ii) சுட்டிலக்கம் :............................
(iii) சித்தியெய்திய பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

குறிப்பு.- பெறப்பட்டுள்ள அதியுயர் தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடவும்.

10.2 க. பொ. த. (சா. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

இரண்டாவது அமர்வு :

(i) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :............................
(ii) சுட்டிலக்கம் :............................
(iii) சித்தியெய்திய பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |

குறிப்பு.- பெறப்பட்டுள்ள அதியுயர் தரத்திலிருந்து தொடங்கி தர ஒழுங்கில் பாடங்களைக் குறிப்பிடவும்.

10.3 க. பொ. த. (உ. த.) பரீட்சை பற்றிய விபரங்கள் :

(i) பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டும் மாதமும் :............................
(ii) சுட்டிலக்கம் :............................
(iii) சித்தியெய்திய பாடங்கள் :-

| பாடங்கள் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

11. குற்றச்செயலொன்றிற்கு எப்போதாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா ? :-

ஆம் ☐ இல்லை ☐

11.1 ஆம் எனின், அக்குற்றம் பற்றிய விபரங்களைத் தருக :............................

12. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு பற்றிய விபரங்கள் :............................

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகம் :............................
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :............................
(iii) செலுத்திய தொகை :............................

பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும்

13. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவுக்கெட்டியவரையில் உண்மையானதும் சரியானதும் என்று நான் இத்தால் உறுதிமொழிகின்றேன்.

(ஆ) என்னால் செய்யப்பட்டுள்ள இப்பிரகடனம் பொய்யானதென உறுதியாகுமிடத்து நான் சேவையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு தகுதியற்றவன் ஆவேன் என்றும் நியமனம் பெற்றபின் அவ்வாறு உறுதியாகுமிடத்து சேவையிலிருந்து நீக்கம் செய்யப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

(இ) ரூபா ...................................... செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டு உரிய இடத்தில் ஒட்டப்பட்டுள்ளது.

(ஈ) மேலும் பரீட்சை நடத்துதல் தொடர்பான நிலஅளவையாளர் நாயகத்தின் விதிகளுக்கும் சட்ட ஒழுங்குகளுக்கும் கட்டுப்படுவதாகவும் உறுதிப்படுத்துகிறேன்.

(உ) இங்கு குறிப்பிடப்பட்டுள்ள எந்தவொரு விடயத்தையும் பின்னர் மாற்ற மாட்டேன்.

................................,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :............................

14. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்துதல் :**

இந்த விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு/திருமதி/செல்வி .................................................................. என்பவரை நான் தனிப்பட்ட ரீதியில் நன்கு அறிந்துள்ளதாகவும் அவர் .................................................................... ஆந் திகதி என் முன்னிலையில் மேலே 13 ஆம் பந்தியின்கீழ் ஒப்பமிட்டதாகவும் உறுதிசெய்கிறேன்.

................................,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

உறுதிப்படுத்துபவரின் பெயர் :............................
பதவிப் பெயர் :............................
முகவரி :............................
திகதி :............................
(பதவி முத்திரையால் சான்றுப்படுத்தவும்.)

15. **திணைக்களத் தலைவரின் சிபாரிசு :**
*(அரச/மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம்)*

15.1 உத்தியோகத்தரின் சுயவிபரக் கோவைக்கமைய விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன்னர் அண்மித்த ஐந்து ஆண்டுகளுக்குள் வேலை, நடத்தை, வரவு திருப்தியானது/திருப்தியற்றது. சகல சம்பள ஏற்றங்களையும் உழைத்துள்ளார்./இல்லை. எந்தவோர் ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் உள்ளாகவில்லை./உள்ளாகியுள்ளார்.

15.2 விண்ணப்பிப்பவர் இந்தப் பதவிக்குத் தெரிவுசெய்யப்பட்டால் சேவையிலிருந்து விடுவிக்கப்பட முடியும்./விடுவிக்கப்பட முடியாது. இவ்விண்ணப்பப்படிவத்தினைச் சிபாரிசு செய்கிறேன்./செய்யவில்லை.

..................................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

திகதி :............................

**அட்டவணை 1**

மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இல. 8 இல் குறிக்கும் முகவரி உரித்தாகும் நிர்வாக மாவட்டம் தொடர்பில் இவ் அட்டவணை தொடர்புடையது.

| நகரங்கள்/மாவட்டங்களின் பெயர்கள் | நகர இலக்கங்கள்/மாவட்டங்களின் இலக்கங்கள் |
|---|---|
| 1. கொழும்பு | 01 |
| 2. கம்பஹா | 02 |
| 3. களுத்துறை | 03 |
| 4. கண்டி | 04 |
| 5. மாத்தளை | 05 |
| 6. நுவரெலியா | 06 |
| 7. காலி | 07 |
| 8. மாத்தறை | 08 |
| 9. ஹம்பாந்தோட்டை | 09 |
| 10. குருநாகல் | 10 |
| 11. புத்தளம் | 11 |
| 12. அநுராதபுரம் | 12 |
| 13. பொலன்னறுவை | 13 |
| 14. பதுளை | 14 |
| 15. மொனராகலை | 15 |
| 16. இரத்தினபுரி | 16 |
| 17. கேகாலை | 17 |
| 18. அம்பாறை | 18 |
| 19. மட்டக்களப்பு | 19 |
| 20. திருகோணமலை | 20 |
| 21. யாழ்ப்பாணம் | 21 |
| 22. வவுனியா | 22 |

9-941

## ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2013(II)

இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவையிலுள்ள மருத்துவ உத்தியோகத்தர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை ஆயுர்வேத திணைக்களத்தினால் கொழும்பில் நடாத்தப்படவுள்ளது என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

1. ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சை தொடர்பில் விடுக்கப்படும் ஒழுங்குவிதிகளுக்கு பரீட்சார்த்திகள் அமைந்தொழுகக் கடமைப் பட்டவராவர்.

2. விண்ணப்பப்படிவமானது இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட் டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவ உருவில் அமைதல் வேண்டும். அம்மாதிரி விண்ணப்பப்படிவத்தின் இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவைப் பிரமாணக் குறிப்புக்கு அமைவாக தகைமை பெற்றுள்ள பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பப்படிவத்தை தயாரித்துக்கொள்ள வேண்டுமென்பதுடன் அவ்வாறு தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிங்களைப் பரீட்சார்த்திகள் தமது திணைக்களத் தலைவர் ஊடாக 2013.10.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக "பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்னை, மஹரகமை" எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவம் அனுப்பப்படும் கடித உறையின்

இடதுபக்க மேல் மூலையில் ''ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2013(II)'' என எழுதப்பட வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கின்ற விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எவ்வித கட்டணமும் இல்லை. அதன் பின் தோற்றுவதாயின் 200 ரூபா பெறுமதியான முத்திரையும் ஒரு பாடத்துக்கு தோற்றுவதாயின் 50 ரூபா பெறுமதியான முத்திரையையும் ஒட்டி அதன் மீது கையொப்பமும் திகதியும் இட்டு அந்த முத்திரையை பாவனையற்றதாக்க வேண்டும். எவ்வித காரணத்தைக் கொண்டும் இப்பணம் மீள வழங்கப்பட மாட்டாது.

3. **பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்**.- பரீட்சார்த்திகள் தாம் தோற்றவிருக்கும் ஒவ்வொரு பாடத்திற்கும் மேற்பார்வையாளர் திருப்தியுறும் வகையில் தங்களது ஆளடையாளத்தை நிரூபிக்குமாறு வேண்டப்படுகின்றனர். ஆளடையாளத்தை நிரூபிப்பதற்கு பின்வரும் ஆவணங்களில் ஏதேனும் ஒன்று ஏற்றுக்கொள்ளப்படும் :-

(i) ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;

(ii) செல்லுபடியான கடவுச்சீட்டு.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட அலுவலர்களுக்கு ஆயுர்வேத ஆணையாளரினால் பரீட்சைக்கான நேரசூசியின் பிரதியும் அனுமதி அட்டைகளும் அனுப்பப்படும். பரீட்சைக்குத் தோற்றும் அலுவலர்கள் பரீட்சை மேற்பார்வையாளர்களுக்கு அவர்களின் கையொப்பங்கள் உறுதிப்படுத்தப்பட்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அனுமதி அட்டைகள் இல்லாமல் பரீட்சைக்குத் தோற்ற இடமளிக்கப்பட மாட்டாது. எவரேனும் பரீட்சார்த்தி ஒருவருக்கு பரீட்சைத் திகதிக்கு குறைந்தபட்சம் 7 நாட்களுக்கு முன்னரேனும் பரீட்சைக்கான அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் அவர் ''பதிவாளர், பரீட்சைகள் பகுதி, ஆயுர்வேதத் திணைக்களம், நாவின்ன, மஹரகம'' என்னும் முகவரிக்கு பின்வரும் விபரங்களுடன் உடன் அறிவிக்க வேண்டும் :-

(i) பரீட்சையின் பெயர் ;
(ii) பரீட்சார்த்தியின் முழுப்பெயர் ;
(iii) பரீட்சார்த்தியின் முகவரி ;
(iv) விண்ணப்பம் அஞ்சலிடப்பட்ட அஞ்சல் அலுவலகத்தின் பெயரும் பதிவு இலக்கமும் திகதியும்.

5. **பரீட்சைத் திட்டம்** *(இலங்கை ஆயுர்வேத வைத்திய சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்புக்கு ஏற்றவாறு) :*

(I) *நிதிப்பிரமாணங்கள்.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணத்தின் தொகுதி I (10 ஆம் அத்தியாயம் தவிர)

(II) *தாபனவிதிக்கோவை.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி I, II, III, IV, V, VI, VII, VIII, XII, XIII, XIV, XXIII, XXVII, XXIX, XXX, XXXII ஆகிய அத்தியாயங்கள் ; அத்துடன்

(ii) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவை தொகுதி II இன் XLVII மற்றும் XLVIII ஆவது அத்தியாயங்கள்.

(III) *மருத்துவமனை நிருவாகம்.-* பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்ட ஒரு வினாத்தாள் :

(i) மருத்துவமனை தொடர்பிலுள்ள பொதுவான விதிகளும் ஒழுங்குவிதிகளும் ;

(ii) மருத்துவமனையைச் சுத்தமாக வைத்திருத்தல் ;

(iii) நோயாளிகள் தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(iv) நோயாளிக்கான பொருத்தமான உணவுகளைப் பெற்றுக்கொள்ளும் விதிமுறைகள் ;

(v) மருந்து உற்பத்தி நிலைய நிருவாகம் ;

(vi) நோயாளர்களை வைத்தியசாலைக்கு அனுமதிப்பது தொடர்பாக நடைமுறையில் உள்ள ஒழுங்குவிதிகள் ;

(vii) மருத்துவமனை மருத்துவ அத்தியட்சகர் தொடக்கம் கனிஷ்ட ஊழியர் வரையான அவர்களது கடமைகள் தொடர்பாக உள்ள அறிவு ;

(viii) மருத்துவமனை தொடர்பில் பொதுவான நிருவாக நடவடிக்கைகள் ;

(ix) ஆயுர்வேத திணைக்களத்தின் பொதுவான நிருவாக ஒழுங்குவிதிகள் ;

(x) ஆயுர்வேத திணைக்களத்தின் களஞ்சியசாலையின் கணக்குகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் ;

(xi) ஆயுர்வேத செயல்முறைக் கோவை

(IV) *அரச கரும மொழி வாய்மொழிப் பரீட்சை.-* (சிங்களம்/தமிழ்) (15 நிமிடங்கள்) :

(i) சிங்கள மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு :

(அ) தமிழில் கேட்கப்படும் கேள்விகளுக்கு தமிழில் விடையளித்தல் ;

(ஆ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல் ;

(இ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல்.

(ii) தமிழ் மொழிமூலம் சேவையில் இணைந்த உத்தியோகத்தர்களுக்கு :

(அ) சிங்களத்தில் கேட்கப்படும் கேள்விகளுக்கு சிங்களத்தில் விடையளித்தல் ;

(ஆ) சிங்களத்தில் கேட்கப்படும் வாக்கியங்களை தமிழில் கூறுதல் ;

(இ) தமிழில் கேட்கப்படும் வாக்கியங்களை சிங்களத்தில் கூறுதல்.

பரீட்சையில் சித்தியடைவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் ஆகக்குறைந்தது 40 புள்ளிகள் பெறவேண்டும்.

பீ. எஸ். கே. ஆர். வீரக்கோன்,
ஆயுர்வேத ஆணையாளர்,
ஆயுர்வேத திணைக்களம்.

ஆயுர்வேத திணைக்களம்,
நாவின்னை,
மஹரகமை,
2013.09.09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

ஆயுர்வேத மருத்துவ சேவையின் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2013(II)

சுட்டெண் [ ]
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்)

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - S
தமிழ் - T [ ]
(பொருத்தமான எழுத்தைக் கூட்டினுள் எழுதவும்)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில்) Mr./Mrs./Miss :----.

2. முதலெழுத்துக்களுடன் பெயர் (சிங்களத்தில்/ தமிழில்) திரு./திருமதி/செல்வி :----.

3. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (ஆங்கிலத்தில் கெப்பிட்டல் எழுத்துக்களில் எழுதவும்) :----.

4. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (சிங்களத்தில்/ தமிழில் எழுதவும்) : திரு./திருமதி/செல்வி :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

6. (i) கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

(ii) கடமை நிலையத்துக்குரிய மாகாணம் :----.

7. (i) கடமைபுரியும் அலுவலகமும் முகவரியும் (சிங்களத்தில்/ தமிழில்) :----.

(ii) தொலைபேசி இலக்கம் :----.

8. (i) தற்போது வகிக்கும் பதவி :----.

(ii) நியமனக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

9. நீங்கள் விண்ணப்பிக்கும் பாடம்/பாடங்கள் :----.

| தொடர் இலக்கம் | பாடம் | பாட எண் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

10. நீங்கள் இதற்கு முன்னர் இப்பரீட்சைக்குத் தோற்றி பின்வரும் பாடத்திலோ அல்லது பாடங்களிலோ சித்தியடைந்துள்ளீரா ? :

நிதிப்பிரமாணம்/ தாபன விதிக்கோவை/ மருத்துவமனை நிருவாகம்/வாய்மொழிப் பரீட்சை (தமிழ்/சிங்களம்) அவ்வாறாயின் பரீட்சை சுட்டெண்ணையும் திகதியையும் குறிப்பிடுக.

| பாடம் | சுட்டெண் | வருடம் |
|---|---|---|
| | | |
| | | |
| | | |
| | | |

11. நீங்கள் பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவையா ? :----.

பரீட்சைக்குத் தோற்றுவது முதற்தடவை இல்லாதவிடத்து ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி :----.

முத்திரை ஒட்டும் பகுதி

முழுப்பரீட்சைக்காக 200 ரூபா பெறுமதியான முத்திரையும், ஒவ்வொரு பாடத்திற்கும் 50 ரூபா பெறுமதியான முத்திரையும் இங்கே ஒட்டவும்.

**குறிப்பு**.- பரீட்சார்த்திகள் உரிய பெறுமதியுடைய முத்திரைகளை ஒட்டி தமது கையொப்பத்தையும் திகதியையும் இட்டு பெறுமதி நீக்கம் செய்ய வேண்டும். ஒன்றின்மேல் ஒன்றாக முத்திரையை ஒட்டக்கூடாது.

மேலே வழங்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு எனக்கு உரித்துண்டு எனவும் சான்று பகர்கின்றேன். இங்கே ஒட்டப்பட்டுள்ள ரூபா ........................................... பெறுமதியான முத்திரை/ முத்திரைகள் செல்லுபடியானவை எனவும் முன்னர் உபயோகிக்கப்படாதவை எனவும் நான் உறுதிமொழியளிக்கின்றேன். இப்பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்க நான் உடன்படுகின்றேன் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

----,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :----.

**குறிப்பு**.- பரீட்சார்த்தி தனது திணைக்களத் தலைவர் அல்லது அத்திணைக்களத் தலைவர் சார்பாக கையொப்பமிடுவதற்கு அதிகார மளிக்கப்பட்ட ஒருவர் முன்னிலையில் கையொப்பமிடல் வேண்டும்.

**கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

திரு./திருமதி/செல்வி ............................................................ எனது அலுவலகத்தில் சேவையாற்றுகிறார் என்றும் எனக்கு தனிப்பட்ட முறையில் இவர் தெரிந்தவர் என்றும் ...................................... .................... ஆந் திகதி எனது முன்னிலையில் கையொப்பமிட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பமும்
பதவி முத்திரையும்.

பெயர் :----.
பதவிப் பெயர் :----.
முகவரி :----.
திகதி :----.

9-1093

---

## அரசாங்க இரசாயனப் பகுப்பாய்வாளர் திணைக்களம்

இலங்கை தொழில்நுட்ப சேவையின் (ஆய்வுகூட உதவியாளர் பதவிக்காக) பயிற்சித் தரத்திற்கு வெளிவாரி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

Open competitive Examination for Recruitment to the post of Laboratory Assistant to the Training Grade of the Sri Lanka Technological Service - 2013

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் வெற்றிடமாகவுள்ள இலங்கை தொழில்நுட்ப சேவையின் பயிற்சித் தரத்தின் ஆய்வுகூட உதவியாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ள இலங்கை ஆண்/ பெண் இரு பாலார்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படுகின்ற போட்டிப் பரீட்சையின் அடிப்படையில் தகுதியானவர்கள் தெரிவுசெய்யப் படுகின்றனர்.

3. இப்போட்டிப் பரீட்சை பரீட்சைத் திணைக்களத்தால் 2013, திசெம்பர் மாதத்திற்குள் 1 ஆம் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள நகரங்களில் தாபிக்கப்படுகின்ற பரீட்சை நிலையங்களில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் நடாத்தப்படுகின்றது. ஏதேனுமொரு நிலையத்திற்காக கோரப்பட்டுள்ள அபேட்சகர்களின் எண்ணிக்கை போதுமானதல்ல எனத் தெரியவருமிடத்து அந்நிலை யத்தை இரத்துச்செய்து அந்த அபேட்சகர்கள் அருகாமையில் உள்ள நிலையத்திற்கு உள்வாங்கப்படுகின்றனர்.

பரீட்சை நடைபெறும் நகரங்கள் மற்றும் நகர இலக்கங்கள் பின்னிணைப்பு 1 இல் காட்டப்பட்டுள்ளது. விண்ணபத்தின் ஏற்புடையதான தலைப்பில் இந்நகரங்கள் மற்றும் நகர இலக்கங்களை இவ்வட்டவணைக்கு அமைவாகப் பூர்த்திசெய்ய வேண்டும். வர்த்தமானி அறிவித்தலின்படி நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற விரும்பும் இரண்டு (2) நகரங்களை விருப்பத்தின் முறையே குறிப்பிடவும். விண்ணப்பிக்கும் மொழி மூலம் மற்றும் நகரங்கள் பின்னர் மாற்றஞ்செய்வதற்கு இடமளிக்கப்பட மாட்டாது.

4. **ஆட்சேர்ப்பு முறை**.- வெற்றிடங்களின் எண்ணிக்கையில் 90% வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக ஒதுக்கப்படுவதுடன், அப்பதவிகளுக்காக அரசாங்க வர்த்தமானி அறிவித்தல் அல்லது பகிரங்க அறிவித்தலொன்றின் மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டு திறந்த போட்டிப் பரீட்சையொன்று நடாத்தப்படும். பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர்கள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்படுகின்றனர். (நேர்முகப் பரீட்சைக்காக புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.) அதன் பின்னர் தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பரீட்சையில் இரு பாடங்களிலும் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களைத் தெரிவுசெய்து அவர்கள் இலங்கை தொழில்நுட்பச் சேவையின் பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்றனர்.

5. **கல்வி மற்றும் பிற தகைமைகள் :**

5.1 வெளிவாரி விண்ணப்பதாரர்களுக்காக-

(அ) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி, கணிதம் மற்றும் விஞ்ஞானம் உட்பட மற்றுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதரம் (சாதாரண தரம்) பரீட்சையில் இரு அமர்வுகளுக்கு மேற்படாத அமர்வுகளில் சித்தி யடைந்திருத்தல் ;

மற்றும்

(ஆ) விஞ்ஞானத் துறையின்கீழ் கல்விப் பொதுத் தராதரப் (உயர் தரம்) பரீட்சையில் சேவைக்கு ஏற்புடையதான இரசாயனவியல் விஞ்ஞான பாடம் உட்பட இணைந்த கணிதம் பௌதீகவியல், உயிரியல் மற்றும் கமத் தொழில் ஆகிய பாடங்களில் மூன்று (03) பாடங்களில் (பொது பரீட்சை தவிர) ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல் ;

அல்லது

பழைய பாடத்திட்டத்தின்கீழ் கல்விப் பொதுத்தராதரம் (உ. த.) பரீட்சையில் சேவைக்கு ஏற்புடையதான இரசாயனவியல் பாடம் உட்பட தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகவியல், விலங்கியல், தாவரவியல், உயிரியல் மற்றும் விவசாயம் ஆகிய பாடங்களில் மூன்று (03) பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந் திருத்தல்.

5.2 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இறுதி நாளன்று விண்ணப்பதாரர்கள் 18 வயதுக்கு குறையாத வராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரசாங்க மற்றும் மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதெல்லை ஏற்புடைய தாகாது.)

5.3 விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

5.4 விண்ணப்பதாரர்கள் சிறந்த நல்லொழுக்கமும் சிறந்த உடல் சுகாதாரத்தையும் உள்ளவர்களாக இருத்தல் வேண்டும் ;

5.5 ஒவ்வொரு விண்ணப்பதாரரும் பதவிக்கு ஏற்புடையதான எல்லாத் தகைமைகளையும் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளின்போது பூர்த்திசெய் திருப்பது கட்டாயமானதாகும்.

6. **விண்ணப்பிக்க வேண்டிய முறை**.- இவ்வறிவித்தலின் இறுதியில் தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கமைவாக ஏ4 அளவிலான கடதாசியில் ஒரு பக்கத்தை பயன்படுத்திக்கொண்டு தயார்செய்துகொள்ளப்பட்ட விண்ணப்பத்தை தனது கையெழுத்தினாலேயே பூர்த்திசெய்யப்படுதல் வேண்டும். உரியவாறு பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் 28.10.2013 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர், "பரீட்சைகள் ஆணையாளர் நாயகம், ஏற்பாடுகள் மற்றும் வெளிநாட்டுப் பரீட்சைகள் பிரிவு, இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்லை" என்னும் முகவரிக்கு பதிவு அஞ்சலில் அனுப்பப்பட வேண்டுமென்பதுடன் விண்ணப்பங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் இடது மேல் மூலையில் "ஆய்வுகூட உதவியாளர் பதவி, அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்" எனக் குறிப்பிடுதல் வேண்டும். ஏற்கனவே அரசாங்க/மாகாண அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் தமது திணைக்களத் தலைவரினூடாக விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறுகின்ற அல்லது உரியவாறு பூர்த்திசெய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை அறவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பத்தின் நிழற்படப் பிரதியொன்று தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும். விண்ணபத்தை தயார்செய்து கொள்ளும்போது அதன் தலைப்பில் குறிப்பிட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழ் மொழிக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். விண்ணப்பத்தின் இல. 1 முதல் 7 வரை முதலாம் பக்கத்திலும், மிகுதிப் பகுதியை 2, 3 ஆம் பக்கங்களிலும் உள்ளடங்குமாறு தயார்செய்யப்பட வேண்டுமென்பதுடன், பூர்த்திசெய்யப்படுகின்ற விண்ணப்பப்படிவம், பரீட்சை அறிவித்தலில் குறிப்பிட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைபானதா என விண்ணப்பதாரர் கவனத்திற்கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லையெனில் விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும்.

7. பரீட்சை அனுமதி அட்டை, பரீட்சை நடைபெறும் திகதி மற்றும் பரீட்சை நேர அட்டவணை பரீட்சார்த்திகளுக்கு பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் அனுப்பிவைக்கப்படும். பரீட்சார்த்திகள் பரீட்சை மண்டபத்தின் மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை அத்தாட்சிப்படுத்திக்கொண்ட அனுமதி அட்டைகளைச் சமர்ப்பிக்க வேண்டும். அனுமதி அட்டைகள் சமர்ப்பிக்கப்படாத எந்தவொரு விண்ணப்பதாரிக்கும் பரீட்சையில் தோற்றுவதற்கு அனுமதி அளிக்கப்பட மாட்டாது. விண்ணப்பதாரிகளுக்கு அனுமதி அட்டை அனுப்பி வைக்கப்பட்டவுடன், அதுபற்றி குறிப்பிடப்பட்ட பத்திரிகை அறிவித்தலொன்று இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தினால் வெளியிடப்படும். அறிவித்தல் வெளியிடப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் கழிந்த பின்னரும் அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின் குறிப்பிட்டுள்ளவாறு அதுபற்றி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்திற்கு அறிவித்தல் வேண்டும். உங்களிடம் வைத்துக்கொள்ளப்பட்ட விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றுடன் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு அப்பால் உள்ள பிரதேசமாயின் அனுமதி அட்டையை அனுப்பிவைக்கக்கூடிய தொலைநகல் முகவரியொன்றுடனான கடிதமொன்று இலங்கை பரீட்சைகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுதல் வேண்டும். அக்கடிதத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ளதாகவிருக்கும்.

8. எழுத்துப் பரீட்சையின்போது ஆள் அடையாளத்தை அத்தாட்சிப்படுத்துவதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது செல்லுபடியான கடவுச்சீட்டு மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சை நடாத்துதல் தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற சட்டதிட்டங்களுக்கு பரீட்சார்த்திகள் உட்படுகின்றனர். அச்சட்டதிட்டங்கள் மீறப்பட்டால் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படுகின்ற தண்டனைக்கு உட்படுவதற்கு நேரிடும்.

9. இவ்வறிவித்தலில் குறிப்பிட்டுள்ள தகைமைகளைக் கொண்டுள்ளவர்கள் மாத்திரமே விண்ணப்பித்துள்ளார்கள் எனக் கருதி உரியவாறு விண்ணப்பப்படிவங்களைச் சமர்ப்பித்துள்ள விண்ணப்பதாரர்களுக்கு போட்டிப் பரீட்சையில் தோற்றுவதற்கு இடமளிக்கப்படும். போட்டிப் பரீட்சைக்காக அனுமதி அட்டை வழங்குதல் விண்ணப்பதாரர் இப்பதவிக்காக தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ளார் என ஏற்றுக் கொள்வதாக கருதப்பட மாட்டாது. எழுத்துப் பரீட்சையில் மேலான திறனைக் காட்டியுள்ள விண்ணப்பதாரர்களை நேர்முகப் பரீட்சைக்கு அழைத்து தகைமைகள் உள்ளனவா எனப் பரீட்சித்துப் பார்க்கும்போது தேவையான தகைமைகள் இல்லையென தெரியவருமிடத்து அவர்கள் நியமனங்கள் வழங்குவதற்கு தகுதியற்றவர்களென கருதப்படுவர்.

10. இவ்வறிவித்தலில் வெளிவராத விடயங்களைப் பற்றி மற்றும் நியமனங்கள் வழங்குதல் பற்றி இறுதித் தீர்மானங்களை எடுக்கும் அதிகாரம் அரசாங்கப் பகுப்பாய்வாளர் கொண்டுள்ளார்.

11. விண்ணப்பப்படிவத்தில் விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் "அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பிரசித்த நொத்தாரிசு, முப்படைகளின் அதிகாரி தரத்தின் உத்தியோகத்தர் ரூபா 2,37,060 க்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தைப் பெறும் அரசாங்க சேவையின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் நிரந்தர பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் ஒருவரால் செய்யப்படுதல் வேண்டும்.

12. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணமாக மீளச் செலுத்தப்படாத ரூபா 600 தொகையொன்று பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவுவைக்கும் பொருட்டு பிரதேச/மாவட்ட செயலகமொன்றால் விண்ணப்பதாரரின் பெயரில் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டைக் கழறாதவாறு விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும். பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்று தன்வசம் வைத்துக்கொள்ளுதல் பிரயோசனமானதாக இருக்கும்.

13. **எழுத்துப் பரீட்சை**.- இப்போட்டிப் பரீட்சை இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தால் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் நடாத்தப்படும். அபேட்சகர்கள் பரீட்சையில் தோற்றும் எல்லா வினாத்தாள்களுக்கும் ஒரே மொழியில் விடையளிக்க வேண்டும். எழுத்துப் பரீட்சை பின்வருமாறு இரு வினாத்தாள்களைக் கொண்டுள்ளது :-

(I) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை ;
(II) இரசாயனவியல் (தொழில்நுட்ப வினாத்தாள்).

14. **பாடத்திட்டம்** :

(1) நுண்ணறிவுத் தேர்வுப் பரீட்சை.- 1 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் பல்விருப்ப மற்றும் சிறு விடையளிக்க வேண்டிய 50 வினாக்களைக் கொண்டிருப்பதுடன் அவ்வெல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். பரீட்சார்த்தியின் தர்க்க ரீதியான நியாயம் காணும் திறனையும் தரப்படும் தகவல்களிலிருந்து நன்கு ஊகித்துணரும் ஆற்றலையும் தீர்மானமெடுப்பதில் உள்ள திறனையும் மதிப்பிடும் வகையிலான வினாக்களைக் கொண்டுள்ளது.

(2) இரசாயனவியல்.- தொழில்நுட்ப வினாத்தாள் - 2 மணித்தியால வினாத்தாள் - 100 புள்ளிகள். இவ்வினாத்தாள் அமைப்பு முறையான கட்டுரை வகையில் வினாக்களைக் கொண்டுள்ளதுடன், எல்லா வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையின் இரசாயனவியல் பாடத்திட்டத்தில் அடங்கிய மேற்குறித்த பதவிக்கு ஏற்புடையதான துறைகளின் மீது அதிக கவனத்தைச் செலுத்தி இவ்வினாத்தாள் தயார் செய்யப்படுகிறது.

15. **தெரிவுசெய்யப்படும் முறை**.- தகைமை பெறுவதற்காக ஒவ்வொரு பாடத்திலும் 40% புள்ளிகள் அல்லது அதற்கு மேலாகப் பெற்றுக்கொள்ள வேண்டும். இப்பரீட்சையில் தகைமை பெறுபவர்களில் கூடுதலான புள்ளிகளைப் பெற்றுக்கொள்ளும் அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சையொன்றுக்கு அழைக்கப்பட்டு தகைமைகள் பரீட்சித்துப் பார்க்கப்படும். நேர்முகப் பரீட்சையில் புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது. தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள மற்றும் பரீட்சையில் இரு பாடங்களிலும் உச்ச புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட அபேட்சகர்களைத் தெரிவுசெய்து அவர்கள் பயிற்சித் தரத்தில் நியமிக்கப்படுகின்றனர்.

16. பின்வரும் ஆவணங்களை தேவைப்படும்போது சமர்ப்பிக்குமாறு அபேட்சகர்கள் தேவைப்படுத்தப்படுகின்றனர் :-

(அ) பெற்றுள்ள உயர் கல்வி மற்றும் தொழில்நுட்ப சான்றிதழ்கள் ;
(ஆ) பதிவாளர் நாயகத்தினால் வழங்கப்படுகின்ற பிறப்புச் சான்றிதழ் ;
(இ) அண்மையில் பெறப்பட்ட மூன்று (03) நற்சான்றிதழ்கள் (இதில் இரண்டு (02) இறுதியாகக் கல்வி கற்ற பாடசாலையின் அதிபரிடமிருந்தும் வதியும் பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தரிடமிருந்தும் இருக்க வேண்டும்).

17. **மருத்துவ பரிசோதனை**.- தெரிவுசெய்யப்பட்ட அபேட்சகர்கள் தாம் இலங்கையின் எப்பிரதேசத்திலும் சேவை செய்வதற்கு உடல் ரீதியில் தகுதியானவர் என உறுதிப்படுத்துவதற்காக மருத்துவ பரிசோதனையொன்றில் தோற்ற வேண்டுமென்பதுடன் மருத்துவ பரீட்சையில் தகுதியற்றவர்கள் எனக் காணப்படுமிடத்து தகைமையற்றவர்களாவர்.

18. **சம்பளத் திட்டம்**.- (6/2006 ஆம் இலக்க பொது நிருவாக சுற்றறிக்கை மற்றும் அதற்கான திருத்தங்களின்படி) -

பயிற்சித் தரம் - எம்என் 1-2006 ஏ-ரூபா 13,120-1 x 145-ரூபா 13,265

ஆய்வுகூட உதவியாளர் II 'ஆ' தொகுதி - எம்என் 3-2006ஏ-ரூபா 15,005-4x180-6x240-11x320-20x360-ரூபா 27,885.

**குறிப்பு**.- பயிற்சியளிக்கும் தரத்தில் ஆட்சேர்ப்பு செய்யப்படுகின்ற அபேட்சகர்களின் சேவைக்கு ஏற்புடையதான பாடத்திட்டத்தின்படி பெற்றுக்கொள்ளும் இரு (02) வருட நடைமுறைப் பயிற்சிக் காலப்பகுதியின் இறுதியில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியடைந்த பின்னர் இலங்கை தொழில்நுட்ப சேவையின் II ஆம் வகுப்பின் "ஆ" தொகுதியில் நியமிக்கப்படுவர்.

19. **சேவை நிபந்தனைகள்** :

19.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும். 2 வருட பயிற்சிக் காலப்பகுதியின் பின்னர் நியமனம் 3 வருட தகுதிகாண் காலத்திற்கு உட்படுத்துவதுடன், தெரிவுசெய்யப்படுவார்கள் விதவை, அநாதை/தபுதாரர் ஓய்வூதிய நிதியத்திற்கு உதவுதொகை செலுத்த வேண்டும்.

19.2 தெரிவுசெய்யப்படுபவர்கள் இலங்கை தொழில்நுட்ப பிரமாணக் குறிப்பு.- தாபன விதிக்கோவையின் கட்டளைகள், ஒழுங்குவிதிகள் மற்றும் அரசாங்கத்தால் வழங்கப்பட்டுள்ள மற்றும் காலத்துக்குக் காலம் வழங்கப்படுகின்ற வேறு கட்டளைகளுக்கும் ஒழுங்குவிதிகளுக்கும் உட்படுதல் வேண்டும்.

19.3 அரச கரும மொழிகள் அல்லாத மொழிமூலமொன்றில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அலுவலர் ஒருவர் நியமிக்கப்பட்ட 3 வருட காலத்துக்குள் அரச கரும மொழிப் பரீட்சையில் சித்தியடைய வேண்டும். குறிப்பிட்ட காலத்துள் இப்பரீட்சையில் சித்தியடையத் தவறுமிடத்து அடுத்துவரும் சம்பள உயர்வு இடைநிறுத்துவதற்கு அது காரணமாகும்.

19.4 நிரந்தர நியமனத் திகதி முதல் 5 வருட காலத்துக்குள் பொது நிருவாகச் சுற்றறிக்கை 7/2007 இல் காட்டப்பட்டுள்ளவாறு தமது பதவிக்கு ஏற்புடைத்தான மட்டத்தின் இரண்டாம் அரச கரும மொழித் தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிட்ட காலத்துள் அத்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ள தவறுமிடத்து அத்தேர்ச்சியைப் பெற்றுக்கொள்ளும் வரை சம்பள உயர்வு நிறுத்தி வைக்கப்படும்.

19.5 1589/30 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் நடவடிக்கை முறைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆட்சேர்ப்புக்கான நிபந்தனைகள் ஏற்புடையதாகின்றன.

19.6 விசேட-

(i) தெரிவுசெய்யப்படுகின்ற விண்ணப்பதாரர்கள் கடமையை ஏற்றுக்கொள்வதற்கு முன்னர் ஆகக் குறைந்தது 7 வருட காலம் சேவை செய்வதாகவும், அவர் அக்காலத்தை திணைக்களத்தில் சேவை செய்வதற்கு தவறுமிடத்து 2,50,000 ரூபாவாகிய செல்லுபடியான பணத்தொகையொன்றும் அதுவரை அலுவலருக்காக அரசாங்கத்தால் செலவிடப்பட்ட சம்பளங்கள், படிகள் உட்பட எல்லாச் செலவுகளும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கு செலுத்துவதாகவும் திணைக்களத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற இரு பிணைகாரர்களுடன் முறியொன்றை எழுதி முடித்துக்கொள்ள வேண்டும்.

(ii) அவர்கள் தீவில் எப்பிரதேசத்திலும் சேவை செய்ய வேண்டும்.

20. இவ்வர்த்தமானி அறிவித்தலின் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

டபிள்யூ. டி. ஜீ. எஸ். குணதிலக,
அரசாங்கப் பகுப்பாய்வாளர்.

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களம்,
இல. 31, இசுரு மாவத்தை,
பெலவத்தை,
பத்தரமுல்லை,

## அட்டவணை

பரீட்சை நடாத்தப்படும் நகரங்களும் நகர இலக்கங்களும்

| | |
|---|---|
| கொழும்பு | 01 |
| கண்டி | 02 |
| மாத்தறை | 03 |
| குருநாகல் | 04 |
| அநுராதபுரம் | 05 |
| இரத்தினபுரி | 06 |
| பதுளை | 07 |
| யாழ்ப்பாணம் | 08 |
| மட்டக்களப்பு | 09 |

மாதிரி விண்ணப்பப்படிவம்

இலங்கை தொழில்நுட்ப சேவையின் (ஆய்வுகூட உதவியாளர் பதவிக்காக) பயிற்சித் தரத்திற்கு வெளிவாரி விண்ணப்பதாரர்களை ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

Open competitive Examination for Recruitment to the post of Laboratory Assistant to the Training Grade of the Sri Lanka Technological Service - 2013

1. (அ) பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம்:
சிங்களம் - 2
தமிழ் - 3
ஆங்கிலம் - 4
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதவும்.)

(ஆ) பரீட்சைக்குத் தோற்றுவதற்கு விண்ணப்பிக்கும் நகரமும் நகர இலக்கமும் :

| நகரம் | நகர இலக்கம் |
|---|---|
| 1. | |
| 2. | |

(வர்த்தமானி அறிவித்தலின் அட்டவணை 1 இன்படி நீங்கள் பரீட்சைக்கு தோற்றுவதற்கு எதிர்பார்க்கும் நகரம் மற்றும் நகர இலக்கத்தை விருப்பத்தின் பேரில் குறிப்பிடவும்.)

2. (அ) (முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு) முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :-
உ-ம் : (SILVA A.B.C)

(ஆ) (முதலெழுத்துக்களை இறுதியாக இட்டு) முதலெழுத்துக்களுடன் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :-
திரு/திருமதி/செல்வி :----.

(இ) முதலெழுத்துக்களால் குறிப்பிடும் பெயர்கள் (சிங்களத்தில்/தமிழில்) :----.

(ஈ) முதலெழுத்துக்களால் கூறப்படும் பெயர்கள் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :

3. நிரந்தர முகவரி :
(அ) சிங்களத்தில்/தமிழில் :-

(ஆ) ஆங்கிலத்தில் (ஆங்கில கெபிட்டல் எழுத்தில்) :-

(இந்த முகவரிக்கு அனுமதி அட்டை தபால் செய்யப்படும்)

(இ) நிரந்தரமாக வதியும் மாவட்டம் :----.

(ஈ) பிரதேச செயலாளர் பிரிவு :----.

(உ) தொலைபேசி இல. :----.

4. பால் : பெண் - 1
ஆண் - 2
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக.)

5. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ?
விவாகமானவர் - 1
விவாகமாகாதவர் - 2
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக.)

6. இனம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
பிற - 3
(உரிய இலக்கத்தை கட்டத்தினுள் எழுதுக.)

7. தேசிய அடையாள அட்டை இல. :

8. (அ) பிறந்த திகதி :
ஆண்டு மாதம் திகதி

(ஆ) 28.10.2013 ஆந் திகதிக்கு வயது :
வருடங்கள் மாதங்கள் நாட்கள்

9. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. (சா. த.) பரீட்சை :

முதலாம் அமர்வு :
ஆண்டு :
சுட்டெண் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

இரண்டாம் அமர்வு :
ஆண்டு :
சுட்டெண் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

(ஆ) க. பொ. த. (உ. த.) பரீட்சை :
ஆண்டு :
சுட்டெண் :

| பாடம் | தரம் |
|---|---|
| | |
| | |
| | |
| | |

10. தொழிற்றகைமைகள்/தொழில்நுட்ப தகைமைகள் :

10.1 பெற்றுள்ள பட்டம்/டிப்ளோமா :----.

10.2 பட்டம்/டிப்ளோமா வழங்கப்பட்ட நிறுவனத்தின் பெயர் :----.

10.3 பட்டம்/டிப்ளோமா செல்லுபடியாகும் திகதி :----.

11. பிற தகைமைகள் :----.

12. ஏதேனுமொரு தவறுக்காக நீதிமன்றமொன்றிலிருந்து தண்டனை பெற்றுள்ளீரா ? : ஆம்/இல்லை

12.1 ஆம் எனில் விபரங்களைத் தருக :----.

13. விண்ணப்பதாரர் தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழில் புரிபவராயின் பதவியின் பெயர், கடமையாற்றும் திணைக்களத்தின் பெயர் மற்றும் முகவரி :----.

14. விண்ணப்பதாரர் இதற்கு முன்னர் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் தொழிலொன்றைப் புரிந்து விலகி இருக்கும் ஒருவராயின் அவ்வாறு விலகுவதற்கு காரணம் :----.

15. பரீட்சைக் கட்டணம் செலுத்துதல் பற்றிய தகவல்கள் :
15.1 பரீட்சைக் கட்டணம் செலுத்திய அலுவலகத்தின் பெயர் :----.
15.2 பற்றுச்சீட்டு இல. :----.
15.3 பணம் செலுத்திய திகதி :----.

| |
|---|
| பணம் செலுத்திய பற்றுச்சீட்டை கழறாதவாறு இணைக்கவும்.<br>(பற்றுச்சீட்டின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்திருக்கவும்.) |

16. இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள தகவல்கள் யாவும் எனது அறிவுக்கு எட்டியவரையில் சரியானவை எனவும், உண்மை யானவை எனவும் வெளிப்படுத்துகிறேன். இப்பரீட்சையின் நிபந்தனைகளின்படி நான் தகுதியற்றவரென தெரியவருமிடத்து எனது விண்ணப்பம் இரத்துச் செய்யப்படுமெனவும் நியமனம் பெற்ற பின்னர் அதுபற்றி தெரியவருமிடத்து சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் ஆளாவேன் என நான் அறிவேன். மேலும் இப்பரீட்சை தொடர்பாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எடுக்கும் முடிவுகளுக்கு உடன்படுகிறேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

17. **விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :** இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ........................................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்றும் அவர் ...................... ஆந் திகதியன்று எனது முன்னிலையில் கையொப்பமிட்டாரென்றும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்துபவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ள விண்ணப்பதாரியின் பின்வரும் சான்றிதழ் திணைக்களத் தலைவரால் நிரப்பப்படுதல் வேண்டும்.)

**மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாண அரசாங்க சேவையின் திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இவ்விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ................................................................................ அலுவலகத்தில் .............................................................. ஆந் திகதி தொடக்கம் ........................................................................... பதவியில்

கடமையாற்றுகின்றார் என்றும் அவரது சேவை திருப்திகரமானதென்றும் இப்பரீட்சையின் பெறுபேறுகளின் மேல் நியமனமொன்றுக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் அவரை தற்போது வகிக்கும் பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாதென்றும் மேலே தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்றும் இத்தால் சான்றுப்படுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

(இது ஏற்கனவே மத்திய அரசாங்கத்தின் அல்லது மாகாண அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையதாகிறது.)

*9-1125*

---

## சட்டமா அதிபர் திணைக்களத்தில் சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பிற்கு ஆட்சேர்ப்பதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013

சட்டமா அதிபர் திணைக்களத்தில் பின்வரும் பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தகுதிவாய்ந்த இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

(அ) சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பின் சிங்கள மொழிமூலப் பதவிகள் - 14

(ஆ) சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பின் ஆங்கில மொழிமூலப் பதவிகள் - 12

(இ) சுருக்கெழுத்தாளர் III ஆம் வகுப்பின் தமிழ் மொழிமூலப் பதவிகள் - 02

**2. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்.**- இவ்வர்த்தமானி அறிவித்தலின் இறுதியில் உள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப ஏ4 அளவிலான (செ. மீ. 21 x 29) தாள்களின் இரு பக்கங்களையும் உபயோகித்து விண்ணப்பதாரியினால் விண்ணப்பப்படிவம் தயார்செய்யப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1 இல் இருந்து 3 வரை முதலாம் பக்கத்திலும் 4 இல் இருந்து 8 வரை இரண்டாம் பக்கத்திலும் மிகுதி மூன்றாம் பக்கத்திலும் அடங்கும் வண்ணம் தயாரிக்கப்பட்டு அதனோடு தொடர்பான தகவல்கள் தனது சொந்தக் கையெழுத்திலேயே தெளிவாக நிரப்பப்படல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப அமையாத விண்ணப்பங்களும் முழுமைபெறாத தகவல்கள் குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பங்களும் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப் பிரதியொன்றை தம்வசம் வைத்துக்கொள்ளுதல் பயனுள்ளதாகும். மேலும் விண்ணப்பப்படிவத்தை தயார்செய்யும்போது விண்ணப்பப்படிவத்தின் தலைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திற்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் தமிழுக்கு மேலதிகமாக ஆங்கிலத்திலும் குறிப்பிடப்படல் அவசியம். விண்ணப்பதாரி பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலத்திலேயே பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பங்கள் 2013.10.25 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு "சட்டமா அதிபர், சட்டமா அதிபர் திணைக்களம், த. பெ. இலக்கம் 502, கொழும்பு 12" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(அ) விண்ணப்பப்படிவங்கள் அனுப்பப்படும்போது "சுருக்கெழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்ப்பு - 2013" என விண்ணப்பங்கள் உறையிடப்படும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

(ஆ) அரசாங்க சேவையில்/மாகாண அரசாங்க சேவையில் கடமை புரியும் விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பப்படிவங்களை தத்தமது திணைக்களத் தலைவர்களினூடாக உரிய திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது. விண்ணப்பப்படிவமோ அதனோடு தொடர்பான வேறு ஆவணங்களோ தபாலில் தொலைந்துள்ளதாகவோ தாமதமடைந்ததாகவோ முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

(ஈ) உரிய மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாகாத, முழுமைபெறாத மற்றும் தாமதித்துக் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் முன்னறிவித்தலின்றி நிராகரிக்கப்படும்.

**3. பரீட்சார்த்திகளின் ஆளடையாளம்.**- தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும் பரீட்சை மண்டப மேற்பார்வையாளர், திருப்திப்படக்கூடிய விதத்தில் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளத்தை நிரூபித்தல் வேண்டும். இந்நோக்கத்திற்காக பின்வரும் ஆவணங்களுள் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும்.

(அ) ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட தேசிய அடையாள அட்டை ;
(ஆ) செல்லுபடியான கடவுச்சீட்டு.

**4. போலியான தகவல்கள்.**- விண்ணப்பப்படிவங்கள் பூர்த்திசெய்யப்படும்போது மிக அவதானத்துடன் சரியான தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். எவரேனுமொரு பரீட்சார்த்தி தகைமையற்றவரென தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் பரீட்சை நடைபெறும்போது, பரீட்சையின் பின்னர் அல்லது எந்தவொரு சந்தர்ப்பத்திலும் அவர் வேலை நீக்கம் செய்யப்படுவார். பரீட்சார்த்தி ஒருவரினால் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனுமொரு தகவல் எச்சந்தர்ப்பத்திலேனும் பொய்யானதென தெரியவருமிடத்து அவர் அரசாங்க சேவையிலிருந்து நீக்கப்படுவார்.

**5. இப்பதவிக்குரிய மாதாந்த சம்பள அளவுத்திட்டம்.**- பொது நிர்வாகச் சுற்றறிக்கை இலக்கம் 06/2006 (iv) இற்கு ஏற்ப எம்என்ஐ-2006(ஏ) ரூ. 13,120-10x145-11x170-10x240-10x320- ரூ. 22,040 ஆவதுடன் இச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமையவே சம்பளம் வழங்கப்படும். பதவியில் அமர்த்தப்பட்டதன் பின்னர் நான்காவது சம்பளப்படி நிலையை எட்டுவதற்கு முன்னர் வினைத்திறன் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியடைதல் வேண்டும்.

**6. பரீட்சைக் கட்டணம்.**- இப்பரீட்சைக்கான கட்டணம் ரூ. 350 ஆகும். இப்பரீட்சைக் கட்டணம் "சட்டமா அதிபர்" பெயரில் இலங்கை வங்கியின் தப்ரபேன் கிளையில் கணக்கிலக்கம் 0007041486 இல் வைப்புச்செய்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தில் உரிய கூட்டினுள் ஒட்டுதல் (வழங்கிய வங்கிக் கிளை, இலக்கம் மற்றும் திகதி என்பவற்றைக் குறிப்பிட்டு) வேண்டும். செலுத்தப்படும் பரீட்சைக்

சட்டணம் எக்காரணம் கொண்டும் திருப்பி கொடுக்கப்பட மாட்டாது. பற்றுச்சீட்டின் நிழற்பட பிரதியை தம்வசம் வைத்திருப்பது பயனுள்ள தாயமையும்.

7. **வயதெல்லை**.- விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினத்தன்று 18 வயதிற்கு குறையாத மற்றும் 30 வயதிற்கு மேற்படாதவ ராயிருத்தல் வேண்டும்.

8. **சேவையில் அமர்த்தப்படுவதற்கான நிபந்தனைகள்**.- (i) இப்பதவி நிரந்தரமானது. ஓய்வூதிய சம்பளம் கொண்டது. விதவைகள் தபுதாரர் ஓய்வூதிய சம்பள நிதியத்திற்குப் பங்களிப்புத் தொகையினைச் செலுத்துதல் வேண்டும். நியமனம் மூன்று (03) வருடகால தகுதிகாண் காலத்திற்குட்படுத்தப்படும். 2009.02.20 ஆந் திகதி அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட 1589/30 ஆம் இலக்க ஆட்சேர்ப்புத்திட்ட விதிக்கோவை ஏற்பாடுகள் ஏற்புடைய தாகும் ;

(ii) அரசாங்க சேவை/மாகாண அரசாங்க சேவையில் நிரந்தரப் பதவியொன்றில் உறுதிப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர் ஒருவர் தெரிவுசெய்யப்படுமிடத்து அவர் ஒரு வருடம் பதில் கடமைக்குட் படுத்தப்பட்டு நியமிக்கப்படுவார்.

(iii) பொது நிர்வாகச் சுற்றறிக்கை 07/2007 மற்றும் அதற்கு இடைநேர்விளைவான சுற்றறிக்கைகளுக்கு ஏற்ப குறித்த தரத்திலான மொழித்திறனை குறிப்பிட்ட காலத்திற்குள் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

(iv) கொழும்பு 12, சட்டமா அதிபர் திணைக்களத்தில் கடமை புரிதல் வேண்டும்.

9. (i) **கல்வித் தகைமைகள்**.- (அ) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் சிங்களம்/ஆங்கிலம்/தமிழ் மொழிகள் உள்ளடங்கலாக 4 பாடங்களில் ஆகக்குறைந்தது திறமைச் சித்திகளுடன் ஒரே தடவையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் ;

அத்துடன்

(ஆ) கல்விப் பொதுத் தராதரப்பத்திர (உயர் தர) பரீட்சையில் (புதிய பாடத்திட்டத்தின்கீழ் சாதாரண பொதுப் பரீட்சை மற்றும் சாதாரண ஆங்கிலம் தவிர்ந்த) ஆகக்குறைந்தது ஒரு பாடத்திலேனும் சித்தியடைந்திருத்தல் :

(ii) தொழில் தகைமைகள்.- மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும் தட்டச்சு மற்றும் சுருக்கெழுத்து தொடர்பான 6 மாதத்திற்குக் குறையாத பாடநெறியினை விண்ணப்பிக்கும் பதவி தொடர்பில் குறித்த மொழி மூலத்தில் பூர்த்திசெய்திருத்தல் ;

(iii) அனுபவம்.- (அ) நீதிமன்றமொன்றில்/தொழில் நியாய சபையொன்றில் ஆறு மாதத்திற்கு (06) குறையாத ஒரு காலத்திற்கு சமயாசமய, ஒப்பந்த அல்லது பயிலுநர் சுருக்கெழுத்தாளர் ஒருவராக கடமையாற்றியிருத்தல் ;

அல்லது

(ஆ) அரச அங்கீகாரம்பெற்ற நிறுவனமொன்றிலிருந்து ஆறு மாத காலத்திற்கு (06) குறையாத பிரயோகப் பயிற்சியைப் பெற்றிருத்தல் வேண்டும்.

10. விண்ணப்பதாரிகள் பின்வரும் ஆவணங்களின் மூலப்பிரதிகளை தேவையான சந்தர்ப்பத்தில் சமர்ப்பிப்பதற்குத் தயார் நிலையில் வைத்திருத்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ்கள் ;
(iii) அண்மையில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு.

11. **நியமனத்திற்காக ஆட்சேர்க்கப்படும் முறை**.- இவ் ஆட்சேர்ப் பிற்கான திறந்த போட்டிப் பரீட்சை எழுத்துப் பரீட்சையொன்றையும் தொழில் ரீதியான பரீட்சையொன்றையும் உள்ளடக்கியுள்ளது. ஆரம்பத் தில் எழுத்துப் பரீட்சை நடைபெறுவதுடன் அதில் சித்தியடைவதற்கு ஒவ்வொரு வினாப்பத்திரத்திற்கும் நாற்பது சதவீத (40%) புள்ளிகளை அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளல் வேண்டும். சித்தியடையும் விண்ணப்பதாரர்களுள் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்ற வரிசைக் கிரமத்திற்கு ஏற்ப வெற்றிட எண்ணிக்கையின் இரண்டு மடங்கு எண்ணிக்கையானவர்கள் தொழில் ரீதியான பரீட்சைக்கு அழைக்கப் படுவர். தொழிற் பரீட்சையிலும் நாற்பது வீத (40%) புள்ளிகளை அல்லது அதற்கு மேல் பெற்றுக்கொள்ளும் பரீட்சார்த்திகளுள் அவர்களது மொத்த புள்ளிகளின் கூட்டுத்தொகைக்கு ஏற்ப திறமை அடிப்படையில் தெரிவுசெய்யப்படுவர். (இவ் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள அனைத்து தகைமைகளும் கட்டாயம் பூர்த்திசெய்யப் பட்டிருத்தல் வேண்டும்.)

(i) விண்ணப்பதாரர்கள் தாம் விண்ணப்பிக்கும் பதவிக்கான மொழி மூலத்திலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும். (உ-ம் : ஆங்கில மொழி மூலத்திற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள் ஆங்கில மொழியிலேயே பரீட்சைக்குத் தோற்றுதல் வேண்டும்.) விண்ணப்பிக்கும் மொழி மூலத்தினை மாற்றுவதற்கு பின்னர் இடமளிக்கப்பட மாட்டாது.

(ii) சிங்கள மொழி மூல விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் சிங்கள மொழி மூல பதவிக்கும் ஆங்கில மொழி மூல விண்ணப்பதாரர்களின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் அடிப்படையில் ஆங்கில மொழி மூல பதவிக்கும், தமிழ் மொழி மூல விண்ணப்ப தாரர்களின் மொத்த புள்ளிகளின் திறமையின் அடிப்படை யில் தமிழ் மொழி மூல பதவிக்கும் நியமனங்கள் மேற்கொள்ளப்படும்.

(iii) இப்பரீட்சை 2013 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் கொழும்பில் மாத்திரம் நடாத்தப்படும்.

12. **தெரிவுசெய்யப்படும் முறை** :

12.1 எழுத்துப் பரீட்சை :

| வினாப்பத்திரம் | காலம் | புள்ளிகள் |
|---|---|---|
| (1) பொது விவேகம் | 02 மணித்தியாலம் | 100 |
| (2) பொது அறிவு | 02 மணித்தியாலம் | 100 |

(i) பொது விவேகம்.- சொற்றொகுதிகள் மற்றும் உருவங்கள் என்ற வகையில் சமர்ப்பிக்கப்படும் பிரச்சினைகள் தொடர்பாக பரீட்சார்த்திகளின் தீர்வு மற்றும் பதில் குறி என்பன மூலம் அப்பிரச்சினைகள் தொடர்பான கருத்து விளக்கம், நிறுவுதல் மற்றும் நேரத்திற்கும் பரப்பிற்குமிடையிலான தொடர்பினால் புரிந்துகொள்ளல் என்பன பற்றி பரீட்சார்த்தி தான்

கொண்டுள்ள பொதுவான விவேகம், தர்க்கத் திறமை, கருத்து வெளியிடல், கணிப் பீட்டுத் திறமை மற்றும் புரிந்துகொள்ளும் திறமை என்பவற்றை மதிப்பீடு செய்தல் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

(ii) *பொது அறிவு*.- தேசிய, பிராந்திய மற்றும் உலகின் பல்வேறு அமைப்புச் சூழல் மற்றும் எமது சமுதாயத்தில் காணப்படும் சமூக, கலாச்சார, கல்வி, அரசியல், பொருளாதார மற்றும் அதனுடன் தொடர்புடைய வேறு காரணிகள் தொடர்பிலும், எழுத்துரு வடிவு, இலக்கண விதிகளை கையாளும் முறை, பிழையின்ற தெளிவான கருத்தினை வெளியிடல் தொடர்பான அறிவு, சாராம்சம் செய்தல் மற்றும் கட்டுரைகள் எழுதும் ஆற்றல் என்பவற்றை அளவிடும் பரீட்சையாகும்.

12.2 தொழிற் பரீட்சை :

| | வினாப்பத்திரம் | தேர்ச்சி புள்ளி | புள்ளிகள் |
|---|---|---|---|
| (1) | சிங்களம்/தமிழ் சுருக்கெழுத்து | 40 | 100 |
| (2) | ஆங்கில சுருக்கெழுத்து | 40 | 100 |

(i) சிங்களம்/தமிழ் சுருக்கெழுத்து

(அ) ஐந்து (5) நிமிடத்தினுள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடத்துக்கு 70 சொற்கள் என்ற வேகத்தில் சுருக்கெழுத்திட்டு அக்குறிப்பை நிமிடத்துக்கு 8 சொற்கள் என்ற வேகத்தில் தட்டெழுத்துச் செய்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) நிமிடத்துக்கு 30 சொற்கள் என்ற வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்து செய்தல்

(ii) ஆங்கில சுருக்கெழுத்து

(அ) ஐந்து (5) நிமிடத்தினுள் தொடர்ச்சியாக வாசிக்கப்படும் பந்தியொன்றை நிமிடத்துக்கு 80 சொற்கள் என்ற வேகத்தில் சுருக்கெழுத்திட்டு அக்குறிப்பை நிமிடத்துக்கு 8 சொற்கள் என்ற வேகத்தில் தட்டெழுத்துச் செய்தல் வேண்டும் ;

மற்றும்

(ஆ) நிமிடத்துக்கு 40 சொற்கள் என்ற வேகத்தில் 20 நிமிடங்கள் தட்டெழுத்துச் செய்தல்

13. **பரீட்சைக்குத் தோற்றுதல்**.- பரீட்சை நடாத்தப்படும் திகதிக்கு ஒரு கிழமைக்கு முன்பு கிடைக்கதக்கவாறு பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். அனுமதி அட்டை இன்றி பரீட்சைக்கு தோற்ற அனுமதி வழங்கப்பட மாட்டாது. பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள், பரீட்சை மண்டப மேற்பார்வையாளரிடம் தமது கையொப்பத்தை உறுதிப்படுத்திய அனுமதி அட்டையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்பட்டவுடன் அது குறித்து பத்திரிகையில் அறிவிப்பொன்று வெளியிடப்படும். அவ் அறிவிப்பு வெளியாகி 2 அல்லது 3 நாட்கள் சென்ற பின்பும் பரீட்சை அனுமதி அட்டை கிடைக்கப்பெறாவிடின், அது தொடர்பாக சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு அறிவிக்க வேண்டும். உறுதிப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவம், பணம் செலுத்திய பற்றுச்சீட்டு ஆகியவற்றின் நிழற்படப் பிரதிகள், பதிவுத்தபால் பற்றுச்சீட்டு, கொழும்புக்கு வெளியே உள்ள பிரதேசமாயின் அனுமதிப்பத்திரத்தை தொலைநகல் செய்வதற்காக ஒரு தொலைநகல் இலக்கத்தையும் உள்ளடக்கியதான உங்களது கோரிக்கைக் கடிதத்துடன் சேர்த்து விபரம் கோருவது நற்பயனளிக்கும்.

14. பரீட்சார்த்தி அவரது கையொப்பத்தினை அரச பாடசாலை அதிபர், சமாதான நீதவான், சத்தியப்பிரமாண ஆணையாளர், பகிரங்க நொத்தாரிசு, முப்படையின் அதிகாரிகள், பொலிஸ் சேவை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட பதவியொன்றை வகிக்கும் உத்தியோகத்தர் அல்லது ரூபா 2,40,360 அல்லது அதற்கு மேற்பட்ட வருடாந்த சம்பளத்தினைப் பெறும் அரச அல்லது மாகாண சேவையில் உள்ள நிரந்தர பதவிநிலை உத்தியோகத்தர் மூலம் உறுதிப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்.

15. பரீட்சை நடாத்துவது தொடர்பில் விதிக்கப்படும் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படுதல் வேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் விதிக்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படவேண்டி ஏற்படும்.

16. இப்பரீட்சையை நடாத்துவது, நியமனம் பெற்றுக்கொடுத்தல் மற்றும் ஏனைய சகல விடயங்கள் தொடர்பிலும் இறுதித் தீர்மானம் சட்டமா அதிபருக்கு உரியதாகும்.

**குறிப்பு**.- இவ்வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகள் மூலமாகவும் வெளியிடப்பட்டிருப்பதுடன் ஏதேனும் வித்தியாசங்கள் காணப்படின் சிங்கள மொழி மூலம் காணப்படும் அறிவித்தலே ஏற்புடையதாகும் என்பதை தயவுசெய்து கருத்தில் கொள்ளவும்.

எஸ். பாலித்த பெர்ணாந்து,
சனாதிபதி சட்டத்தரணி,
சட்டமா அதிபர்.

சட்டமா அதிபர் திணைக்களம்,
கொழும்பு 12,
2013, செத்தெம்பர் 27.

(அலுவலக உபயோகத்திற்கு மட்டம்)

மாதிரி விண்ணப்பப்படிவம்

சட்டமா அதிபர் திணைக்களத்தின் சுருக்கெழுத்தாளர் (III) ஆம் வகுப்புக்கு சேர்த்துக்கொள்ளும் திறந்த போட்டிப் பரீட்சை - 2013

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் :
சிங்களம் - 1
தமிழ் - 2
ஆங்கிலம் - 3

(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

1. 1.1 பெயர் (முதலெழுத்துக்கள் இறுதியில் வரக்கூடியவாறு முதலெழுத்துக்களுடன் பெயர், ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
(உ-ம் : Perera ABC)

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

1.5 பால் : ஆண் - 0
பெண் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

2.3 பரீட்சை அனுமதிப்பத்திரம் அனுப்பவேண்டிய முகவரி :
(i) சிங்களத்தில்/தமிழில் :----.
(ii) ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில் :----.

2.4 தொலைபேசி இலக்கம் :----.

3. 3.1 விவாக நிலை :
திருமணமானவர் - 2
திருமணமாகாதவர் - 1
(உரிய இலக்கத்தினைக் கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 விண்ணப்ப கடைசித் திகதியன்று வயது :

வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

3.4 நீங்கள் இலங்கைப் பிரசையாவது பிறப்புரிமையாளா ? பதிவுசெய்ததன் மூலமாகவா ? :----.

4. கல்வித் தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :
வருடம் :----. மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடங்கள் | சித்தியடைந்த தரம் |
|---|---|
| 1. ................................ | ........................................ |
| 2. ................................ | ........................................ |
| 3. ................................ | ........................................ |
| 4. ................................ | ........................................ |
| 5. ................................ | ........................................ |
| 6. ................................ | ........................................ |
| 7. ................................ | ........................................ |
| 8. ................................ | ........................................ |
| 9. ................................ | ........................................ |
| 10. ................................ | ........................................ |

4.2 க. பொ. த. (உ. த.) பரீட்சை தொடர்பான விபரம் :
(i) பரீட்சை வருடமும் மாதமும் :
வருடம் :----. மாதம் :----.
(ii) சுட்டிலக்கம் :----.
(iii) பெறுபேறுகள் :----.

| பாடங்கள் | சித்தியடைந்த தரம் |
|---|---|
| 1. ................................ | ........................................ |
| 2. ................................ | ........................................ |
| 3. ................................ | ........................................ |
| 4. ................................ | ........................................ |

5. தொழில் தகைமைகள் :

| பாடநெறியின் பெயர் | கால வரையறை | நிறுவனம் |
|---|---|---|
| | | |

6. அனுபவம் :

| பயிற்சிபெற்ற அல்லது பணியாற்றிய நிறுவனத்தின் பெயர் | கால வரையறை |
|---|---|
| | |

7. நீர் ஏதாவது குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றின் மூலம் தண்டனை விதிக்கப்பட்டுள்ளீரா ?

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

(குறித்த கூண்டில் ✓ அடையாளமிடுக)

அவ்வாறு தண்டனை பெறப்பட்டிருப்பின் அது என்ன குற்றம் தொடர்பாக எந்த நீதிமன்றத்தினால் என்ன தண்டனை பெறப் பட்டது என்பது தொடர்பில் விபரம் சமர்ப்பிக்கவும்.

8. பரீட்சைக் கட்டணம் செலுத்திய பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட இலங்கை வங்கி கிளையின் பெயர் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கமும் திகதியும் :----.
(iii) செலுத்திய தொகை :----.

பற்றுச்சீட்டை அகற்ற முடியாதவாறு இங்கு ஒட்டவும்.

9. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

(அ) இவ்விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விபரங்கள் நான் அறிந்தவகையில் உண்மையானதும் வழுவற்றதும் என கண்ணியத்துடன் வெளிப்படுத்துகிறேன். இங்கு ஏதாவதொரு தகவல் பூர்த்தியாக்கப்படாமல் அல்லது பிழையாக நிரப்பப்பட்டதன் காரணமாக ஏற்படும் நஷ்டங்களை பொறுத்துக்கொள்வதற்கு நான் உடன்படு கின்றேன். மேலும், இங்குள்ள எல்லா தகவல்களையும் சரியாக நிரப்பியுள்ளேன் என உறுதிமொழிகின்றேன்.

(ஆ) பரீட்சை நடாத்துதல் தொடர்பில் விதிக்கப்படும் சட்ட திட்டங்களுக்கு அமைவாக செயற்படுவதற்கும், இவ்வரையறைகளுக்கு அமைவாக நான் தகுதியற்றவர் என வெளிப்படுமிடத்து பரீட்சைக்கு முன்பு அல்லது பரீட்சைக்குப் பின்பு எனது வேலை நிலையை இரத்துச் செய்வதற்கு எடுக்கப்படும் தீர்மானத்தை அங்கீகரிப்பதற்கு நான் உடன்படுகிறேன்.

(இ) என்னால் வழங்கப்பட்டுள்ள இக்கூற்றுக்கள் இவ்வாக்குமூலங்கள் பொய்யானவை என நிரூபிக்கப்பட்டால் பதவி நியமனத்தை பெற்றுக்கொள்ள தகைமையற்றவராவதுடன், நியமனத்தைப் பெற்றுக்கொண்ட பின்பு பதவி நீக்கம் செய்யப்படுவதற்கும் ஆட்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

(ஈ) இங்கு குறிப்பிட்டுள்ள எந்தவொரு தகவலையும் பின்பு மாற்றம் செய்ய மாட்டேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

10. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்**.- இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கும் திரு./திருமதி/செல்வி ......................................................... என்பவரை நான் தனிப்பட்ட முறையில் நன்கு அறிவேன் என்பதையும் அவர் ........................ ................................ ஆந் திகதி என் முன்னிலையில் அவரது கையொப்பத்தை இட்டார் என்பதை உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரது கையொப்பமும் பதவி முத்திரையும்.

உறுதிப்படுத்தும் உத்தியோகத்தரின் பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
திகதி :----.

11. **திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**.- (தற்போது அரச சேவையில் பதவி வகிப்பவர்களுக்கு மாத்திரம் ஏற்புடையது.)

திரு./ திருமதி/ செல்வி ......................................................... ............................... சேவையில் உள்ள ................................ பதவியை வகிக்கும் அலுவலர் எனவும், அவர் மேற்குறிப்பிட்டுள்ள தகவல்கள் உண்மையானவை எனவும் சான்றுபடுத்துகின்றேன். இப்பதவிக்கு அவர் தேர்ந்தெடுக்கப்படின் ........................ ...................................... சேவையிலிருந்து அவர் விடுவிக்கப்பட முடியும்/ முடியாது என்பதையும் மேலும் அறிவித்துக்கொள்கிறேன்.

...................................,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும் பதவி முத்திரையும்.

திகதி :----.

9-1153

---

## கால்நடைவள உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள அலுவலர்களுக்கான I ஆவது மற்றும் II ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சை - 2010/2011 (2013)

மேலே குறிப்பிடப்பட்ட சேவையில் உள்ள அலுவலர்களுக்கான வினைத்திறன்காண் தடைப்பரீட்சை 2014 ஆம் ஆண்டு சனவரி மாத ஆரம்பத்தில் கொழும்பில் நடத்துவதற்கு எதிர்பார்க்கப்படுவதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது. இதன் பொருட்டு 2013 ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆந் திகதிக்கு கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள அலுவலர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகள் இரண்டிற்கும் ஒரே முறையில் தோற்றக்கூடியதாக நேர அட்டவணைகள் தயாரிக்கப்படும்.

3. **பாடவிதானம்**.- முதலாம், இரண்டாம் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைகளுக்கு பொருத்தமான பாடத்திட்டம் மற்றும் ஏனைய ஒழுங்குவிதிகள் அதன் சேவைப் பிரமாணக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளன. இலங்கை கால்நடைவள அபிவிருத்தி சேவையில் உள்ள அலுவலர்களுக்கான I ஆவது வினைத்திறன்காண் தடைப் பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'அ' விலும் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான பாடத்திட்டம் இணைப்பு 'ஆ' விலும் குறிப்பிடப்பட்டுள்ளன.

வினைத்திறன்காண் பரீட்சைகளின்போது பாடங்களுக்கு அமர்கையில் ஒரே தடவையிலோ அல்லது அதற்கு மேற்பட்ட அமர்வுகளிலோ தோற்ற முடியும்.

4. இச்சேவையில் உள்ள அலுவலர்கள் வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கு தோற்றவேண்டிய பாடங்கள் பின்வருமாறு :

**இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை**

| 1 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | | 2 ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை | | |
|---|---|---|---|---|---|
| தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) | தொடர் இல. | விடயம் | நேரம் (மணி) |
| 01 | அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும் | 02 | 03 | அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும் | 02 |
| 02 | நிதிப்பிரமாணம் | 02 | 04 | நிதிப்பிரமாணம் | 02 |

**குறிப்பு**.- "ஒவ்வொரு பாடத்தின் பொருட்டும் மொத்தப் புள்ளிகள் 100 என்ற அடிப்படையில் வழங்குவதுடன் I ஆவது மற்றும் II ஆவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை இரண்டிலும் சித்தியடையும் பொருட்டு ஒவ்வொரு வினாப்பத்திரத்திலும் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலாகவோ பெறுதல் வேண்டும்."

5. கீழே தரப்பட்டுள்ள 1966.09.04 ஆந் திகதியுடையதும் 701 ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான திறைசேரி சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியைக் கவனிக்குமாறு இவ்வினைத்திறன்காண் தடைப் பரீட்சைகளுக்குத் தோற்றும் உத்தியோகத்தர்கள் வேண்டப்படுகின்றனர்.

திணைக்களப் பரீட்சை (பதவி உயர்வு மற்றும் வினைத்திறன்காண் தடைப்பரீட்சை உட்பட) பரீட்சைக்குத் தோற்றும் மொழி உத்தியோகத்தர் அரச சேவையில் சேர்வதற்கு தோற்றிய போட்டிப் பரீட்சையின் மொழியிலோ அல்லது அரச கரும மொழியிலோ அமையும். போட்டிப் பரீட்சை இல்லாமல் நேரடியாக சேவைக்கு சேர்ந்தவர்கள் விடயத்தில் பதவி உயர்வுக்கு அல்லது வினைத்திறன்காண் தடைப்பரீட்சைக்கான மொழியாக இருக்கவேண்டியது உத்தியோகத்தர்கள் சேவையில் சேர்ந்துகொள்வதற்கு தகுதிபெற்ற அல்லது அரசகரும மொழியாகும்.

6. பரீட்சை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழி மூலங்களில் நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தி அமருகின்ற ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரே மொழியில் அமருதல் வேண்டும். விண்ணப்பம் செய்த மொழி மூலத்தை பின்னர் மாற்றம் செய்ய இயலாது.

7. பரீட்சார்த்தி ஒருவர் தனக்கு உரித்தில்லாத மொழியில் பரீட்சைக்கு தோற்றியமை பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் அவரது பரீட்சார்த்தத் தன்மை நீக்கப்படும்.

8. விண்ணப்பப்படிவங்கள் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய A4 தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்தில் தொடர் இலக்கம் 01 முதல் 08 வரை முதலாம் பக்கத்திலும் மீதி இரண்டாம் பக்கத்திலும் அமையுமாறும் தயாரிக்கப்படுதல் வேண்டும். அதற்கு உரிய தகவல்களை தமது சொந்த கையெழுத்தினால் மிகவும் தெளிவாக எழுதி நிரப்புதல் வேண்டும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இயைய அமையாத விண்ணப்பங்களும் பூரணப்படுத்தாத விண்ணப்பங்களும் அறியத்தராமலேயே நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் நிழற்படப்பிரதி ஒன்றினை வைத்துக்கொள்வது பயனுடையதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்கள் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய அமைந்துள்ளதா என்பதனை சரிபார்த்துக்கொள்ள வேண்டியதுடன் அவ்வாறு அமையாதவிடத்து நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்கள் தயார்படுத்துகையில் அங்கு தலைப்பிலுள்ள பரீட்சையின் பெயர் சிங்கள விண்ணப்பப்படிவங்களில் சிங்களத்திலும் ஆங்கிலத்திலும், தமிழ் விண்ணப்பப்படிவங்களில் அதன் தலைப்பு தமிழிலும் ஆங்கிலத்திலும் குறிப்பிடுதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்ட பரீட்சைகள் இரண்டிற்கும் அமர்வதாயின் விண்ணப்பங்கள் வெவ்வேறாக ஒவ்வொன்றிற்கும் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும்.

9. இப்பரீட்சை பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் நடாத்தப்படும். பரீட்சார்த்திகள் அவரால் விதிக்கப்படும் பரீட்சை விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் கட்டுப்பட்டவராவார். இவ்விதிகளும் பிரமாணங்களும் இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ளன. பரீட்சை நடாத்துவது தொடர்பில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்கு விதிகளுக்கு பரீட்சார்த்திகள் கீழ்ப்படிய வேண்டும். அவ்வொழுங்கு விதிகளை பின்பற்றாதவிடத்து பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்படும் தண்டனைக்கு அவர் உட்படுவர்.

10. விண்ணப்பப்படிவங்கள் 2013.10.25 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களப் பணிப்பாளர் நாயகத்திற்கு கிடைக்கக்கூடியதாக நிறுவனத் தலைவரினூடாக பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.

11. விண்ணப்பதாரருக்கு அனுமதி அட்டை அனுப்பப்பட்டவுடனே அதுபற்றி பத்திரிகை விளம்பரம் ஒன்று பரீட்சை திணைக்களத்தினால் வெளியிடப்படும். விளம்பரம் செய்யப்பட்டு 2 அல்லது 3 நாட்கள் சென்றும் அனுமதி அட்டைகள் கிடைக்காதவிடத்து அறிவித்தலில் குறிப்பிடப்பட்டதற்கு அமைய அதுபற்றி இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியக்கொடுத்தல் வேண்டும். நீங்கள் வைத்திருக்கும் விண்ணப்பப்படிவம் மற்றும் பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் சான்றுபடுத்தப்பட்ட பிரதி, பதிவுசெய்யப்பட்ட பற்றுச்சீட்டு, கொழும்பிற்கு வெளியே ஆயின் அனுமதி அட்டை அனுப்பிவைப்பதற்கான தொலைநகல் இலக்கத்தையும் குறிப்பிட்டு உங்களது வேண்டுகோள் கடிதத்துடன் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறியத்தருவது சாலவும் சிறந்ததாகும்.

12. மேலே 11 ஆம் பந்தியில் கூறப்பட்டுள்ளவாறான தேவைகளைப் பூர்த்தி செய்யத் தவறும் பரீட்சார்த்திகளால் பின் சமர்ப்பிக்கப்படும் எழுத்துமூலமான கடிதத் தொடர்புகள் எதுவும் கவனத்திற்கொள்ளப்படமாட்டாது.

13. அடையாள அட்டை சம்பந்தமாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விடுக்கப்பட்ட 1971, யூன் மாதம் 29 ஆந் திகதியிடப்பட்டதும் எஸ். ஈ. 274 ஆம் இலக்கத்தைக் கொண்ட சுற்றறிக்கையின்பால் பரீட்சார்த்திகள் அனைவரினதும் கவனத்திற்கு கொண்டுவரப்படுகின்றது. பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை நிரூபிப்பது பரீட்சார்த்திகளின் பொறுப்பாகும். இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைகளின்போது பரீட்சார்த்திகளின் ஆளடையாளத்தை பரீட்சை மண்டப பொறுப்பாளர் உறுதி செய்து கொள்ளும் பொருட்டு ஏற்றுக்கொள்ளப்படுவது ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்படும் தேசிய ஆளடையாள அட்டை அல்லது ஏற்றுக்கொள்ளப்பட்ட கடவுச்சீட்டு மாத்திரமேயாகும். பரீட்சை ஆரம்பிக்கப்படும் திகதி அன்று தமது கையொப்பத்தை சான்றுபடுத்திக்கொண்ட நுழைவு அட்டையை பரீட்சை மண்டப பொறுப்பாளரிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

14. இப்பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளிடம் இருந்து பின்வரும் அடிப்படையில் கட்டணங்கள் அறவிடப்படவுள்ளது :

(அ) முதல் அமர்வு முழுப்பரீட்சை அல்லது ஒரு பகுதி கட்டணம் அறவிடப்படமாட்டாது.

(ஆ) இதன் பின் ஒவ்வொரு அமர்வுக்குமாக-

| | |
|---|---|
| முழுப்பரீட்சை | - ரூபா 400.00 |
| ஒரு பாடம் | - ரூபா 100.00 |

இப்பரீட்சைக் கட்டணமானது, பரீட்சை ஆணையாளர் நாயகத்தின் வருமானத் தலைப்பு 2003-02-13 இற்கு வரவு வைப்பதற்கு எந்தவொரு மாவட்ட/பிரதேச பணிமனையில் செலுத்தி விண்ணப்பதாரரது பெயருக்கே பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தில் உரிய இடத்தில் கழறாதவாறு ஒட்டிவிடவும்.

இப்பரீட்சைக்கு ஏற்கனவே தோற்றியுள்ள பரீட்சார்த்திகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ளவாறு பொருத்தமான கட்டணங்களைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றார்கள்.

கே. எம். ரீ. கேந்தரகம,
செயலாளர்,
கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு.

கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு ,
இல. 45, புனித மைக்கல் வீதி,
கொழும்பு 03,
2013, செத்தெம்பர் 09.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இலங்கை கால்நடை வள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ளவர்களுக்கான முதலாவது மற்றும் இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை - 2010/2011 (2013)**

*First and Second Eficency Bar Examination for the Officers of the Sri Lanka Livestock Development Officers Service - 2010/2011 (2013)*

(கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் பரீட்சையின் பெயர் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.)

1. உத்தியோகத்தர் பரீட்சைக்கு தோற்றும் மொழிமூலம்
   சிங்களம் - 2
   தமிழ் - 3
   ஆங்கிலம் - 4 ☐
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

2. உத்தியோகத்தர் விண்ணப்பிக்கும் பரீட்சை
   முதலாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 1
   இரண்டாவது வினைத்திறன்காண் தடைப்பரீட்சை - 2 ☐
   (உரிய இலக்கத்தை கூட்டினுள் எழுதுக)

3. (அ) முதலெழுத்துக்கள் இறுதியில் வருமாறு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.
   (உதாரணம் FERNANDO. B. A)
   (ஆ) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

4. தபால் முகவரி (அனுமதி அட்டை அனுப்பப்படுவதற்காக, ஆங்கில கெப்பிட்டல் எழுத்துக்களில்) :----.

5. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

6. அறிவித்தலின் நான்காவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பாட எண்களுடன் தோற்றும் பாடங்கள் (தெளிவாக குறிப்பிடப்படுதல் வேண்டும்) :-

   (i) பாட எண் ☐☐☐☐ பாடம் ..............
   (ii) பாட எண் ☐☐☐☐ பாடம் ..............

7. பிறந்த திகதி :- ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

8. பதவிப் பெயர் :----.
   திணைக்களத்தின் பெயர் :----.

9. இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமனம் பெற்ற திகதி :----.

10. இதற்கு முன்னர் முழுதாக அல்லது பகுதியாக இப்பரீட்சைக்குத் தோற்றியுள்ளீரா என்பதைக் குறிப்பிடுக. அவ்வாறு தோற்றியிருப்பின் பாடங்களையும் ஆண்டையும் மாதத்தையும் தருக :----.

**விண்ணப்பதாரரது உறுதியுரை :**

மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் சரியானவை எனவும், விண்ணப்பத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொழி மூலத்தில் இப்பரீட்சையை எழுத உரிமையுள்ளது எனவும், பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் பரீட்சை ஒழுங்கு விதிகளுக்கும் பெறுபேறு வெளியிடுவது தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கும் நான் கட்டுப்படுவேன் எனவும் இத்தால் உறுதி மொழிகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

11. செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் : ரூபா-

| பணம் செலுத்திய பற்றுச்சீட்டினை இங்கு ஒட்டவும் |
|---|

**கால்நடை உற்பத்தி சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்தினூடாக பரீட்சை ஆணையாளர் நாயகம் :**

சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதனகத்துக் காணப்படும் விபரங்களையுடைய பரீட்சார்த்தி பரீட்சைக்குத் தோற்ற தகைமையுடையவரென்றும், விண்ணப்பதாரியினால் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலத்தில் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு அவருக்கு தகைமை உள்ளது எனவும் சான்றுபகர்கின்றேன்.

*விண்ணப்பதாரியினால் ரூபா ............................... பெறுமதியான பரீட்சைக் கட்டணம் முறையாக செலுத்தப்பட்டுள்ளது எனவும் உரிய பற்றுச்சீட்டு ஒட்டப்பட்டுள்ளது எனவும் விண்ணப்பதாரரது கையொப்பம் எனவும் நான் சான்றுபடுத்துகின்றேன்.

----,
திணைக்களத் தலைவரின் கையொப்பமும்
பதவிப்பெயரும்.

திகதி :----.
(*கட்டணம் செலுத்தாதவிடத்து வெட்டிவிடவும்)

**பின்னிணைப்பு "அ"**

(அ) இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள அலுவலர்களுக்கான முதலாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தி அடைதல் வேண்டும் .-

(i) அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும் (மொத்தப் புள்ளிகள் 100)
(ii) நிதிப் பிரமாணம் (மொத்தப் புள்ளிகள் 100)

(1) **அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும்**.- அலுவலக நிருவாகமும் மற்றும் தாபன விதிக்கோவையும் எனும் இவ்வினாப்பத்திரம் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமையும் :

தாபன விதிக்கோவை அத்தியாயம் : II, III, IV, V, VIII, XII, XIII, XIV, XIX, XLVIII.

**குறிப்பு**.- சித்தியடையும் பொருட்டு மொத்தப் புள்ளிகளில் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலாகவோ பரீட்சார்த்தி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

(2) **நிதிப்பிரமாணம்**.- நிதிப்பிரமாணம் எனும் இவ்வினாப்பத்திரம் நிதிப்பிரமாணத்தில் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமையும் :

I **ஆம் அத்தியாயம்**- செலவினமும் வருவாய் மதிப்பீடும் ;
திரட்டிய நிதி, ஆண்டு மதிப்பீடு, ஆண்டு மதிப்பீடுகளில் ஏற்படும் வேறுபாடு (நி. பி. 1 முதல் 68 வரை)

III **ஆம் அத்தியாயம்**- நிதி முகாமையும் வகை கூறும் தன்மையும்.- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், கணக்கீட்டு உத்தியோகத்தர்கள், வருவாய்க் கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு கொடுப்பனவு செய்வதற்கான அதிகாரம் கையளித்தல், அங்கீகரித்தல், சான்றளித்தல் (நி. பி. 124 முதல் 147 வரை)

**குறிப்பு**.- சித்தியடையும் பொருட்டு மொத்தப் புள்ளிகளில் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலாகவோ பரீட்சார்த்தி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

பரீட்சார்த்தி மேற்கூறப்பட்ட பாடங்களுக்கு தனித்தனியாக தோற்றலாம்.

***பின்னிணைப்பு "ஆ"***

*(அ) இலங்கை கால்நடைவள அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் உள்ள அலுவலர்களுக்கான இரண்டாம் வினைத்திறன்காண் தடைப் பரீட்சையின்போது பின்வரும் பாடங்களில் சித்தியடைதல் வேண்டும் .-*

(i) *அலுவலக நிருவாகமும் தாபன விதிக்கோவையும் (மொத்தப் புள்ளிகள் 100)*
(ii) *நிதிப் பிரமாணம் (மொத்தப் புள்ளிகள் 100)*

*(1)* ***அலுவலக முறைமையும் மற்றும் தாபன விதிக்கோவையும்.*** *- அலுவலக முறைமையும் மற்றும் தாபன விதிக்கோவையும் எனும் இவ்வினாப்பத்திரம் தாபன விதிக்கோவையின் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமையும் :*

*தாபன விதிக்கோவை அத்தியாயம் :* XV, XVI, XXIII, XXIV, XXV, XXXVII, XXVIII, XXX, XLVII, XLVIII.

*உத்தியோகத்தர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு பொது நிருவாகச் சுற்றறிக்கைகள் ஏற்புடையனவாகும்.*

***குறிப்பு.*** *- சித்தியடையும் பொருட்டு மொத்தப் புள்ளிகளில் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலாகவோ பரீட்சார்த்தி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*(2)* ***நிதிப்பிரமாணம்.*** *- நிதிப்பிரமாணம் எனும் இவ்வினாப்பத்திரம் நிதிப்பிரமாணத்தில் பின்வரும் அத்தியாயங்களைக் கொண்டமையும் :*

VI ***ஆம் அத்தியாயம்*** *- அரசாங்க நிதியின் கட்டுக்காப்பு, கட்டுநிதியும் வங்கிக் கணக்குகளும், அரசாங்க நிதியின் பாதுகாப்பு, செவ்வை பார்ப்புச் சபைகள் வரைவுகள் மற்றும் வங்கிக் கணக்குகள் (நி. பி. 315-396)*

XIII ***ஆம் அத்தியாயம்*** *- வழங்கல்கள் மற்றும் சேவைகள்.- வழங்கல்கள், கொள்வனவு செய்தல், களஞ்சியசாலை ஆய்வு, களஞ்சியப்படுத்தல், களஞ்சியப்படுத்துகையின் பொது ஒப்பந்தக் கேள்விச் செயன்முறையில் இருந்து விலகுதல். (நி. பி. 708-775)*

***குறிப்பு.*** *- சித்தியடையும் பொருட்டு மொத்தப் புள்ளிகளில் 40% புள்ளிகளையோ அல்லது அதற்கு மேலாகவோ பரீட்சார்த்தி புள்ளிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.*

*பரீட்சார்த்தி மேற்கூறப்பட்ட பாடங்களுக்கு தனித்தனியாக தோற்றலாம்.*

*9-1152*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*